திராவிடநாடு

1—2—59 | வார வெளியீடு | விலை 16 காசு

வா, வா!

(கா. வேழவேந்தன்)

வரலாற்றைச் சொல்லி, நேற்று
வாழ்ந்ததைச் சொல்லி, இன்று
பரந்துள்ள கொடுமை சொல்லி,
பாழ்நிலை சொல்லி, நாளை
வரப்போகும் துன்பம் சொல்லி
வழிகாண வாவா வென்றால்
கரங்கூப்பி வாழ்கின் றாயே
காதிலாச் 'செவிட' னோநீ?

இலக்கியம் காட்டி, மீதி
இருக்கின்ற சான்று காட்டி,
பலப்பல வளங்கள் காட்டி,
பயன்படா அவலம் காட்டி,
கலங்கிடும் நிலையைக் காட்டி
கதிகாண வாவா வென்றால்
விலங்காக வாழ்கின் றாயே
விழிஇலாக் 'குருட' னோநீ?

விழிபோன்ற மொழியைத் தீய்த்தால்
விரட்டிடு; நமது பண்பை
ஒழிப்போரை நாட்டை விட்டே
ஓட்டிடு; நமக்கு நேர்ந்த
பழியினைத் துடைப்ப தற்குப்
படைகொண்டு வாவா வென்றால்
கழிவாழ்வு வாழ்கின் றாயே
கையிலா 'முடவ' னோநீ?

பெருமையைக் கேட்டு, பெற்ற
பீடெலாம் கேட்டு, அன்று
பொருள்சேர்த்த பான்மை கேட்டு,
புலமையைக் கேட்டு, ஈர
அருள்வாழ்வு கேட்டு, வாவா
ஆர்த்தெழு என்ற பின்னும்
மருள்சூழ வாழ்கின் றாயே
வாயிலா 'ஊமை' யோநீ?

மலையேறப்போகிறார்கள்!

மாட்சிமை தங்கிய 'நம்ம சர்க்கார்' மலையேற முடிவுசெய்துவிட்டது; மாநிலம் அறியும், இதனை. இந்த 'உன்னதமான' முடிவுக்கு என்ன காரணம் என்பதை விளக்கமாகச் சொல்கிறார்களோ எனின், பதிலில்லை. இதையென்ன, இந்த மக்களிடம் விளக்குவது, அவர்கள்தான் நம்மை ஓட்டளித்து உட்காரவைத்திருக்கிறார்களே எனும் தைரியம் போலும், விளக்கம் தரவில்லை, இன்னும். எப்படியாவது ஓட்டுக்களை வேட்டையாடும் 'திறமை' இருக்குமட்டும், எதற்கு இந்த மக்களுக்கு விளக்கம் தரவேண்டும் எனகிற அலட்சியம் போலும்!! ஏப்ரல் திங்களில், சட்டசபைக் கூட்டத்தை, உதகமண்டலத்திலே நடத்தப் போகிறோம் என்பதை மட்டும், தெளிவாக அறிவித்து விட்டார்கள். இதற்கென்ன அவசரம் வந்தது, அப்படியென்ன அவசியம் ஏற்பட்டது என்பதைச் சொல்லவில்லை; இதோ புறப்படப் போகிறோம் என்று பயணத்திற்கான ஆயத்தங்கள், மும்முரமாகச் செய்யப்பட்டு வருகின்றன.

எண்ணிக்கை பலம் இருந்தால் மட்டுமே போதும் என்று ஆட்சிப் பீடமேறியோர் எண்ணிவிடக் கூடாது—எந்தப் பிரச்சினையிலும்; கூடியவரையில், பல்வேறு கட்சியினரின் கருத்துக்களுக்கொப்ப முடிபுகள் எடுக்கப்படல் வேண்டும்.

மொழிப் பிரச்சினை மற்றும் மாணவர் பிரச்சினை, இன்னோரன்ன முக்கியமான பிரச்சினைகளிலே மாற்றுக் கட்சியினரின் ஆலோசனையையும், ஒப்புதல்களையும் பெற்றிடும் பொருட்டு, அரும்பாடுபட்ட அதே அமைச்சர், சட்டமன்றக் கூட்டத்தை உதகையிலே நடத்துவதா? வேண்டாமா? என்ற பிரச்சினையிலே மட்டும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிர்ப்பினையும் பொருட்படுத்தாமல் செயல்பட முனைந்த காரணமென்ன?

மலைகளில் வனப்புமிக்கது, உல்லாசத்திற்கேற்றது, உதகை, என்கிறார்கள்! உண்மைதான்! ஆனால், ஜனநாயக வரைமுறைகளையும் மீறி, அங்கே சட்டமன்றத்தை நடாத்திடும் ஏற்பாடுகளிலே இறங்கிடுவதில் என்ன பொருளிருக்க முடியும்?

இக்கட்டுரை நமது ஆங்கில ஏடான 'ஹோம் லண்டு' இதழின் மொழி பெயர்ப்பாகும்.

ஆளும் கட்சியின எண்ணிக்கை பலம், அவர்களுக்கு அளித்திருக்கிற மமதையைத் தவிர வேறெதனைக் காட்டுகிறது இந்தச் செயல்?

"தி. மு. க. என்ன செய்திட முடியும்—அவர்கள் 15 பேர், நாம் 150—போதாக்குறைக்குப பொதுவுடைமையினரும் நம் பக்கம் — தி. மு. கழகத்தினர் வேண்டுமானால் ஆர்ப்பரிப்பர், 'ஆகா இது அடுக்குமா' என்று முழங்கிடுவர் —பொதுமக்கள்கூட ஓரளவு ஆத்திரப்படக் கூடும்—ஆயினுமென்ன? உதகையிலே கிடைக்கவிருக்கிற உல்லாசம் — பார்க்குமிடமெங்கணும் நீக்கமற நிறைந்திருக்கும இயற்கையெழிற் காட்சிகள்— வண்ணப் பறவைகள், வாச மலர்கள் — உள்ளமும் உடலும் ஒருசேரக் குளிரவைக்கும் சுற்றுப்புறம் — இவையனைத்தையும் விட்டுவிட்டு, கொளுத்தும் வெயிலில் இங்கே அவதிப்படுவானேன்?"

என்ற எண்ணத்தைத் தவிர வேறெதைக் காட்டுகிறது, மலையேறப் போவோம் என்பது.

அமைச்சர் இத்தகைய முடிவுக்கு வந்தாரே என்பதிலே மட்டுமல்ல நமக்கிருக்கிற கவனமும், ஏற்பட்டிருக்கிற வியப்பும். இந்தப் பிரச்சினை எழுந்த ஒவ்வொரு சமயத்திலும், அமைச்சர் ஒவ்வொரு விதமாக உருவெடுத்து, புதுப்புது விளக்கங்களைத் தந்து வந்திருக்கிறார், எவரையும் திகைத்திடச் செய்யும் வகையில்!

புன்னகை உதிர்த்து, பரிவான சொற்களுரைத்து, பாசத்தோடு தட்டிக்கொடுத்தால் போதும், இந்த, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஏமாந்துவிடுவார்கள், நம் வலையில் விழுந்துவிடுவார்கள், உதகைக்குச்செல்ல ஓர் நொடியில் அவர்தம் ஒப்புதலைப் பெற்றிடலாம் என்று, பாவம், நமது நிதியமைச்சர் நீண்ட நாட்களாக மனப்பால் குடித்திருக்கிறார்.

தி. மு. கழகம் அவர் எதிர்பார்த்ததைப்போல் ஒப்புதல் அளிக்காத காரணத்தால், அமைச்சர் புதியதோர் உருவெடுத்தார்—வேறோர் விளக்கமும் தரத் தலைப்பட்டார்.

அப்போதுதான் "எனக்கென்னவோ அதிலே தனி அக்கறை ஒன்றுமில்லை" என்றார் — அங்ஙனம் கூறி நீண்ட நாட்களாகிவிடவில்லை; அதற்குள்ளாக உதகையிலே சட்டமன்றக் கூட்டம் நடத்தத்தான் போகிறோம் என்று முடிவு தெரிவிக்கிறார்.

உதகையிலே சட்டமன்றம் கூட்டப்பட வேண்டும் என்று ஆட்சியாளர்கள் கொண்டிருக்கிற அரிப்பு நீண்ட நாளாக இருந்துவருகிற ஒன்று-திடீரென்று ஏற்பட்டதல்ல!

(15-ம் பக்கம் பார்க்க)

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [1-2-59] தனிப் பிரதி 16-காசு [இதழ் 29

மிகப் பெரிது!

யானைகளை அனுப்பி அதன்மூலம் வெளிநாடுகளுக்கு இந்தியத் துணைகண்டத்தின் அளவையும் சிறப்பையும் தெரியப்படுத்திக் கொள்கிறார் நேரு! 'இந்தியா'வின் சிறப்பினை நம்மவர்களுக்கு விளக்க நமது கக்கனாருக்கு யானை கிடைக்கவில்லை; பானை அகப்பட்டிருக்கிறது!!

'இந்தியா' என்பது, உழைத்துண்டாக்கிய பானையாம்—இதை உடைத்து எறிய எதிர்க்கட்சிகள் முயலுகின்றன, என்கிறார் கக்கன். மிகக்கஷ்டப்பட்டுக் கொண்டுவந்த சுதந்திரத்தைத்தான், பானை என்கிறார். தான் செய்த பானைகள் தன்னிடமேயிருக்கட்டும் என்று குலாலர்கள் நினைக்கமாட்டார்கள். அந்த ஏகபோக உரிமை, இந்தக் காங்கிரஸ்காரர்களுக்குத்தான் உண்டு. சுதந்திரம் அரும்பியது முதல், எல்லாமே தங்களால்தான் என்று சொல்லிக்கொண்டு, என்னென்ன அனுபவிக்க முடியுமோ அத்தனையும் அனுபவிக்கிறார்கள். தடியடியும் சிறையும் பெற்றவர்கள் மட்டும்தான் அனுபவிக்கிறார்களா எனின், மாணிக்கவேலருக்கு—கடலூராருக்கும் கூட 'சான்ஸ்' அடிக்கிறது. யார் தங்களது தாசர்களாக இருப்பார்களோ, அவர்களுக்கும் 'கொஞ்சம்' கொடுத்துவிட்டு, கிடைத்த இடத்தை, விடாமல் பிடித்துக்கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்.

செய்யப்படும் பானைகள். எப்படியிருக்கின்றன என்பதைப் பொறுத்துத்தான், அவைகளுக்கு மதிப்பு. அடுப்பில் வைக்கக் கூடிய அளவுக்குள்ள பானையாக இருந்தால், வீட்டரசிகள் சமையல் செய்யப் பயன்படுத்துவார்கள்! அதேபானை பெரிதாக இருந்தால் உப்பு புளி கொட்டிவைக்கப் பயன்படும்! சில பானைகளைக் கழுநீர் ஊற்ற மட்டுமே செய்வார்கள்! காய்ச்சிடும் கள்ளச் சாராயத்தை ஊற்றிவைக்கவும் பானைகள் இதுபோது பயன்படுகின்றன!!

மண்ணையெடுத்து,பிசைந்து,சுழற்றி,பானையாகச் செய்வது சிரமம்தான். அந்தப் பானையை யார் பயன்படுத்துகிறார்கள், எப்படிப் பயன்படுத்துகிறார்கள் எனும்போதுதான் மதிப்பும் சிறப்பும் ஏற்படுகிறது. சுதந்திரம் என்கிற பானையைச்செய்யக் காங்கிரஸ் தியாகிகள் பட்ட தொல்லைகளையும் துயரங்களையும் மறுப்பாரில்லை. ஆனால், அந்தப் பானை இன்று எப்படியிருக்கிறது? மக்கள் வசம் இல்லை! காங்கிரஸ் குலாலர்களே வைத்துக்கொண்டிருக்கிறார்கள்!! சுதந்திரப் பலனை மக்கள் அனுபவிக்கிறார்களா என்றால், அவர்களைச் சுற்றித் தடைகளும் கட்டுப்பாடுகளும், அடிக்கடி கொட்டிக்கொண்டே உள்ளன. பொதுக் கூட்டம் போட, திரைப்படம் பார்க்க, பேச, எழுத, எதற்கும் தடை, இந்த ஆட்சியில். தடைகள்தான் கிடைக்கின்றன; உடைக்கும் உணவுக்கும் தள்ளாடுகிறான் ஏழை! சுதந்திரத்தின் முழுப்பலனும் அவனுக்குக் கிட்டவில்லை!! சின்னாட்களுக்கு முன், ஆந்திரத்தில், அரிசியின் விலையைக்குறைக்கவேண்டும் என்று கோரி ஒருவர் உண்ணாவிரதமிருந்தார். நெல்லூர், ஆந்திரத்தின் அரிசிக் களஞ்சியம். அதிகமாக நெல் விளையும் அங்கேயே, அரிசியின் விலை, ஏனைய இடங்களைக் காட்டினும் அதிகமெனில், என்ன சொல்வது? எனவே ஒருவர் அரசின் கவனத்தைக் கவர்ந்து, இந்த அநியாயத்தைச் சுட்டிக்காட்ட, பட்டினிப்போர் துவங்கினார். மக்களும், அவருக்குப் பெருந்திரளாக வந்து ஆதரவு காட்டினார்கள். அரிசியின் விலை குறையவேண்டுமென்பதில் எந்த ஏழைக்குத்தான் துடிப்பு இருக்காது? கூடினார்கள்—அரிசி விலையைக் குறை என்றார்கள். என்ன செய்தது தெரியுமோ, அங்கிருக்கும் காங்கிரஸ் அரசு? துப்பாக்கிகளை வெடிக்கவிட்டது! துயரப் படுக்கையில் ஐந்து பேரினைச் சாய்த்துவிட்டது!! அரிசி விலையைக் குறை என்று கேட்டாலும், அதிகக் கூலிகொடு என்று கோரினாலும், சுதந்திர ஆட்சியில், சென்னைத் துறைமுகத்தில் நடந்ததுபோல, வேட்டுகள்தான் கிளம்புகின்றன. இதுபோல, எங்கும், சுதந்திர ஆட்சியில் நாற்றம்தான் பரிசாகக் கிடைத்துக்கொண்டிருக்கிறதே தவிர, நறுமணம், அமைச்சர்களின் வாயிலும் வாழ்விலும்தான் இருக்கிறது.

பானையை உதாரணத்துக்கழைத்த கக்கன் ஒரு உண்மையை மறந்துவிட்டார். அந்தப்பானை, வீட்டுக்குப் பயன்படுகிற அளவில் இல்லாத பானை என்பதை. வீட்டின் அளவுக்குப் பெரிதாக ஒரு பானையைச் செய்து, அதை யாரும் தொடவும் கல் வீசவும்

முடியாமல் பணத்தைச் செலவழித்துப் பாதுகாத்து வைத்திருப்பதால் யாருக்கு என்ன இலாபம்? அடுப்படியில் வைக்கவும் முடியாது! தண்ணீர் கொட்டக்கூட முடியாது!! ஏனெனில், அது பெரிய பானை. உபயோகப்பட முடியாத அளவுக்குப் பெரியபானை—என்பதை தக்கன்கள் இன்னும் உணரவில்லை.

பெரிய பானை, இதோ பாரீர், என்று கண்காட்சியில் வேண்டுமானால் வைக்கலாம். இன்றுள்ள அகண்ட இந்தியா, வெளிநாட்டினர்பார்த்து மிரளத் தான் பயன்படுகிறதே ஒழிய, உள்நாட்டிலே உள்ளவர்களுக்கு அதிருப்தியைத் தந்துகொண்டிருக்கிறது. நாகர்கள், குஜராத்தியர், சீக்கியர் இப்படி ஒவ்வொருவரும், தங்களுக்குப் போதுமான உரிமையும் சுதந்திரமும் கிடைக்கவில்லை எனக் குமுறுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகமும் அதனையே சொல்கிறது. மிகப் பெரிய பானையைப்போல, மிகப் பெரிய பூபாகம் இது! இங்கே வாழும் ஒவ்வொரு வட்டாரமும், தத்தம் வாழ்வையும் வசதியையும் கவனித்துக்கொண்டு வாழவேண்டுமென்றால், ஒவ்வொரு வட்டாரத்துக்கும் தங்கள் பொறுப்புகளைக் கவனித்துக்கொள்ளவேண்டிய அதிகாரங்களும், ஆட்சி உரிமையும் இருக்கவேண்டும். அப்போதுதான் சுதந்திரத்தின் பயன், யாவருக்கும் கிடைக்க முடியும். இப்போதுள்ள ஆட்சிமுறையில், எல்லாம் டில்லி! எதற்கும் டில்லி!!

சிறிய பானையென்றால் அவரவர்கள் சமைத்து வாழலாம்—மிகப் பெரிய பானையில் சமைத்துச் சாப்பிடுவதென்றால் சாமான்யமா? ஏணிவைத்துக்கொண்டு, அரிசி வேகிறதா வேகவில்லையா எனும் வேலையைச் செய்பவன், அங்கேயிருந்தபடியே ஒரு பக்கமிருப்போருக்கு வெந்த சோறுகளைப போட்டுக்கொண்டிருந்தால் இன்னொரு பக்கமிருப்பவர்களுக்குத்தெரியாது. ஏனெனில், வீட்டின் அளவுக்குமிஞ்சிய பெரிய பானை இது!! இவன் வேலையைத்தான் டில்லி, செய்கிறது என்று நாம் சொன்னால், "சே சே! டில்லி, தர்ம புத்திரர்களது கூடாரம். அவர்களுக்கு இந்தக் கெட்ட புத்திகள் எல்லாம் கிடையாது. அங்கேயும் செய்வார்கள்; இங்கேயும் செய்வார்கள்" என்று பேசுகிறார்கள், காங்கிரஸ்காரர்கள். தெற்குக்கான வசதிகள் வளராததற்குக் காரணம் ஏமாற்றும் தன்மையல்ல; இன்னும் அவர்கள் கவனம் இங்கே திரும்பவில்லை, என்கிறார்கள். பெரியபானை! ஏணி தேவைப்படுகிறது சோறு வெந்ததா என்று பார்க்க! அப்படியிருக்கும்போது, அவன் கண்ணுக்கு ஒரு பக்கம்தான் தெரியும். இன்னொருபக்கம் பிறகுதான் தெரியமுடியும்! — என்பதைக் கூடச் சரியெனவைத்துக்கொள்வோம்; டில்லி சூதுமதி கொண்டதல்ல என்பதையும் ஒப்புவோம்.

ஆனால் பார்வை திரும்புகிறவரையில் பரிதாபப்படுவது யார்? அந்தப் பார்வையைத் திருப்பமுடியாத அளவுக்குப் பெரிய பானை ஏன்?—என்கிற கேள்வி, எழாமலா இருக்கும்? அண்மையில், கானாவிலிருந்து வந்திருந்த டாக்டர் நிக்ருமா, டில்லியை விட்டுப் பெங்களூருக்குக் கிளம்புகையில் வழியனுப்பிப் பேசியிருக்கிறார் பண்டித நேரு. அப்போது, உண்மையான இந்தியாவைப் பார்க்கவேண்டுமானால் தெற்கே போய்ப்பாருங்கள் என்று சொல்லியிருக்கிறார். அதோடு, அவர் சொல்லியுள்ள இன்னொரு வாசகம், தக்கன்கள் கவனத்தில் படவேண்டும். நேரு அவர்கள் சொல்கிறார்,

> "கடந்த பல ஆண்டுகளில், நான் பல இடங்களைப் பார்க்கவேண்டுமென்று பறக்கிறேன். அடிக்கடி போகிறேன். என்றாலும், இந்தியாவில் எத்தனையோ இடங்களை நான் பார்க்கவில்லை."

என்று குறிப்பிட்டிருக்கிறார். இந்தியத் துணை கண்டத்திலேயே அதிக நாட்கள் அங்குமிங்கும் பறந்து பறந்து பல இடங்களுக்கும் 'விஜயம்' செய்யக்கூடிய ஒரே ஒரு ஆசாமி நேரு அவர்கள்தான்! அவருக்கு முன்னும் சரி, பிறகும் சரி இப்படி சுற்றியவர்கள் சுற்றக்கூடியவர்கள், இருந்ததுமில்லை; இருக்கப் போவதுமில்லை. அப்படிப்பட்டவரே சொல்கிறார்,

"என்னாலேயே எல்லா இடங்களுக்கும் போகமுடியவில்லை. ஏனெனில், அவ்வளவு பெரிய பூபாகம்"

என்று! அவராலேயே போகமுடியவில்லை, அவ்வளவு பெரிய பூபாகம் இது. இந்த உண்மையினை எவரும் மறுக்க முடியாது — தக்கனின் குரு காமராஜர்கூட!! பரப்புப் பெரிதாகப் பெரிதாக, ஆட்சிமுறை சரியாக இராது என்பதைச் சரிதம் சொல்லுகிறது. அகண்ட பிரான்சை நிறுவமுயன்றான் நெப்போலியன்! அவனரசு பெரிதாயிற்று, வீழ்ந்தான! தங்களது அரசினை மிகமிக விரிவாக்கினார்கள் ரோமாபுரியினர். இன்றுள்ள பிரிட்டனைக்கூடவென்றார்கள். அவர்கள் வீழ்ச்சிக்குக் காரணமே, பெரியதொரு பூபாகத்துக்கு உரிமையாளர்கள் ஆனதுதான் எனகிறது சரித்திரம்! இதே கதைதான், கிரேக்கர்களுக்கும் ஏற்பட்டது. அன்று மட்டுமல்ல, இன்று உலகிலுள்ள பெரிய நாடுகளில் ஒன்று ரஷ்யா. அதுகூட, பல உரிமைகளையும் பொறுப்புகளையும் தன்னகத்தே அடங்கியுள்ள மாகாணங்களுக்குக் கொடுத்திருக்கிறது. அரசியலறிஞர்கள் எல்லாம் சொல்கிறார்கள் "பெரிய தேசம் என்கிற பெருமையைவிட, நன்றாக வாழும் சிறிய தேசம் என்பதே நல்லது" என்று. பானை எவ்வளவு பெரிதாயிருந்தென்ன! சிறிதாயிருந்தாலும் தங்கக்குடத்தின் பெருமை வருமோ!!

பெரிது என்பதாலும், பெரிய தேசத்தில் வாழ்கிறோம் என்று சொல்லிக்கொள்வதாலும் கிட்டுகிற இன்பத்தைவிட, சுகமான ஒருநாட்டில் வாழ்கிறோம்; அது எங்கள் சொந்த நாடு என்று சொல்லிக்கொள்வதில்தான் பேரின்பம் இருக்கிறது, பானையை உதாரணம் காட்டும் தக்கன் இதை உணரவேண்டும். காங்கிரஸ்தோழர்களும் — உண்மையானவர்களைத்தான் குறிப்பிடுகிறோம்!! — இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நேரு அவர்களாலேயே பல இடங்களைப் பார்க்க முடியவில்லை என்றால், பல இடங்கள் நிரம்பிய இந்தப் பூமிப்பரப்பை எப்படி ஒரு 'நாடு' என்று சொல்ல முடியும்? இது, ஒரு துணைக்கண்டம்! நிச்சயமாக ஒரு துணைக்கண்டம்!!

கண்ணீரால் தீட்டிய கடிதம்

அன்பு நண்பா!

நான் வாழ்க்கைப் போராட்டங்களில் நிறையப் பங்கெடுத்த வண்ணமாகத்தான் இருக்கின்றேன். சிற்சில சமயங்களில் என்னையும் அறியாமல் நான் எண்ணுவதும் உண்டு. "உலகத்தில் ஏன் மனிதர்களாகப் பிறந்தோம்?" என்று. மனிதனாகப் பிறந்ததினால் அல்லவா எல்லா வித இன்னல்களையும் இடர்ப்பாடுகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. தமிழகத்திலே, பிறந்ததையே பெருங் குற்றமாகக் கருதுகிறேன்! நீ நினைக்கலாம், தமிழகத்திலே பிறந்ததை ஏன் குற்றமாகக் கருத வேண்டும் என்று! தமிழகத்திலே உள்ள தகைமைசால் பண்புள்ளம் கொண்டவர்கள் தானே மலேயா, பர்மா, இலங்கை இந்தோசீனா போன்ற நாடுகளுக்குச் சென்று அடிமையாக வாழ்கிறார்கள்? தன்னைப்பெற்ற தாய்த்திரு நாட்டிலே வாழ வழியின்றி, நல்ல பெயரோடு வாழ முறையின்றிச் செல்லுகின்றார்கள ? ஆண்ட பரம்பரையாம்? அன்பின் இருப்பிடமாம்! வந்தவர்களை வாயார வரவேற்று வாழ்க்கை அமைத்துக்கொடுத்த வண்டமிழ்ச் சோலையாம்! தமிழர்களின் தனிப் பெருங் குணத்தைத் தரணியெங்கும் பரப்பச் செய்யும் பாசறையாம்? அத்தகைய பெருமை பொருந்திய இடத்திலிருந்து, தன்னிகரற்ற தமிழகத்திலிருந்து எங்கோ நம் கலாச்சாரத்திற்கும் பண்பாட்டிற்கும் முற்றிலும் வேறுபாடான ஓர் இடத்திற்கு வயிறறைக் கழுவுவதற்காக வந்திருப்பதை நான் செய்த பாக்கியம் என்றா நீ கருதுகிறாய்? ஒரு தமிழன் தன்னைப் பாராட்டி, சீராட்டி, பருவமாக்கி, உயர்ந்தவனாக்கிய தன் தாயகத்திலேயே வாழ வழியில்லாதபோது இன்னொரு நாட்டிலேயா இன்பம் காணப் போகிறான்?

அன்று என்னை நாகபட்டினம் வரை வந்திருந்து கண்ணீர்ப் பெருக்கினிடையே வழியனுப்பினாயே! என்னைப்போன்ற ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெருங்குடி மக்கள் வாடிய முகத்தோடும்,

ஆடுதுறை. அ ஹபீப்முஹம்மது

உடைந்த உள்ளங்களோடும் வாழ்க்கையை நடத்துவதற்காகச் செல்லும் காட்சியையும் கண்டாயே? என்ன நினைத்தாய்? கடலையும், விண்ணையும் துச்சமாக மதித்து வயிறு ஒன்றை வளர்க்க வேண்டும் எனக்கருதி வறுமைப் பிடியில் சிக்கித்தவித்த தமிழர்களைக் கண்டாய்? இருவரும் கண்ணீரைச் சிந்தினோம்? பலன்! அதைத்தான் இன்றைய நாட்களில் நம்மால தமிழகத்தில் சுலபமாகச் செய்ய முடியும்?

கடல் அலை பொங்கி எழுவது போல் கன்னித் தமிழ் நாட்டுக் காளையர்களின் இதயங்களிலே வேதனை புகுந்திருப்பதைக் கண்டேன்! நாட்டிலே இருக்கும்போது சாதி, சமயம், குலம் எனறு பேசினாயே? ஆனால் கப்பலிலேயும், வாழவந்த இடத்திலேயும் அந்த வேறுபாடுகளைக் காண முடியவில்லை நண்பா! நாமெல்லாம் தமிழர்கள் எனற உணர்ச்சியே எங்கும் மேலிடுகிறது. கடல் கடந்து இன்பத் தமிழ் நாட்டின் அன்பையும் மறந்து வயிற்றுப் பிழைப்பை நாடி மலேயா போன்ற நாடுகளுக்கு வந்திருக்கும் என்னைப்போன்றவர்கள் இதயம் எல்லையில்லாத் துயரத்திற்கு ஆளாகிறது. இதே கடலிலே முன்னொரு காலததில் நம் இனம் கப்பலிலே சென்று யவனத்திற்கும், ரோமாபுரிக்கும் முத்தையும், பவழத்தையும், மிளகையும், வாசனைத் திரவியங்களையும், அகிலையும், தேக்கையும், சந்தனத்தையும், இனன பிறவற்றையும் அனுப்பி வியாபாரம்செய்து, அத்துடன் நாகரிகத்தையும், தமிழ் மணத்தையும் பரவச்செய்த அதே தமிழினம் இன்று அதேகப்பலிலே அடிமை வாழ்வுநடத்துவதற்காக, அருமை மனைவி மக்களின் அன்பு முகத்தையும், ஆசை வார்த்தைகளையும் மறந்து, ஒட்டிய வயிறோடும், கட்டிய வேட்டியோடும், வாடிய முகத்தோடும், வறுமைச் சாயலோடும் சென்றுகொண்டிருப்பதை எண்ணும்போதுதான் உள்ளம் சுக்குநூறாகிறது.

இங்கே என்னைப்போன்றவர்களின் உள்ளங்களிலே மகிழ்ச்சியைக் காணமுடியாது. மாறாக வேதனையின் பல உருவங்களைக் காணலாம்! வாழத்தான் வந்தோம்! வரவேற்புக்கிடைக்காவிட்டாலும் வாழ்க்கையில் நிம்மதியாவதுகிடைக்கிறதா? ஆறுதலாவது கிடைக்கிறதா? அதுதான் இல்லை நண்பா? அதுதான் இல்லை. சரித்திரம் கண்டறியாத புதுமை நண்பா! அரசு செலுத்தி அகிலம் போற்றும் வகையில் வாழ்ந்த பரம்பரை அந்நிய நாட்டிற்கு

காவடி எடுத்துச் செல்வதைத் தமிழகத்திலே இந்நூற்றாண்டிலே தான் பார்க்க முடியும்? இதற்கு முன், தமிழர்கள் இந்நிலையை எய்தினார்கள் என்று படித்தோமா? கேள்விப்பட்டோமா? நிறையக் கேள்விப்பட்டிருக்கிறோம். எவற்றை? கண்ணகிக்கு சிலைவடிக்க இமயம் வரை சென்று கனக விசயரைத் தோற்கடித்துக் கல் சுமக்கச் செய்து சிலை அமைத்துப் பெருமைப்பட்ட தமிழ்க் காவலர்களைப் பற்றிக் கேள்விப்படுகிறோம்? எவர் வரினும் அஞ்சாது எதிர்த்து நின்று போராடிப் பகைவர் படையைச் சின்னாபின்னமாக்கி வெற்றிக் கொடியை நாட்டிய மூவேந்தர்களைப்பற்றிக் கேள்விப்படுகிறோம்? வறுமையால் வாடிய போதிலும் தனக்கு வந்த பரிசில்களை எல்லோருக்கும் கொடுத்து இன்புற்ற செந்தமிழ்ச் சிற்பிகளைப் பற்றிக் கேள்விப்படுகிறோம்! உலகத்திற்கே முதல் மொழியாகிய தமிழ், சங்கம் அமைத்துவளர்ந்த விதம், அதன் பெருமைபற்றிக் கேள்விப்படுகிறோம்? பறம்புமலையின் காவலன் வேள்பாரியின் வள்ளல் தன்மையைப் பற்றிக் கேள்விப்படுகிறோம்! தமிழன் ஆழ்கடலைத் தாண்டி வாணிபம் செய்து ரோமாபுரிக்கும், தமிழகத்திற்கும் தொடர்புகொண்டு நாகரிகத்தோடும், செல்வத்தோடும் விளங்கினான் என்பதைப்பற்றிக் கேள்விப்படுகிறோம்? ஆனால் இன்று அவற்றின் பெருமையெல்லாம் பேச முடியாமல் ஊமையாக இருக்கும் தமிழர்களின் நிலையைக் காணும்போதெல்லாம் என் மனம் அனலைக் கக்குகின்றது! கக்கி என்ன பயன்?

பிழைக்க வந்த இடத்திலேயாவது நிம்மதி கிடைக்கிறதா? கிடைக்காது நண்பா? கிடைக்காது. நான மலேயா இரப்பர்த் தோட்டங்களிலே வேலை செய்கிறேன். வேளாவேளைக்கு உணவு சாப்பிடக்கூட என் வசதியும், குடும்ப நிலையும் இடந்தரவில்லை. இந்திய உபகண்டத்திலே எவ்வளவோ பிரிவினர் வாழ்கின்றனர்! ஆனால் தாயகத்தை விட்டு அந்நிய நாடுகளை நோக்கிச் சென்றிருப்பவர்களைச் சற்று ஆராய்ந்து பார்த்தால் தமிழர்கள் தான் பெரும் பகுதியினராகக் காணப்படுவார்கள்! எந்த ஒரு வடநாட்டு மார்வாரியோ, குஜராத்தியோ, பஞ்சாபியோ, வங்காளியோ அந்நிய நாட்டை நோக்கி அதுவும் வயிற்றுப் பிழைப்பிற்காகச் சென்றதாகக் கேள்விப்பட்டிருக்கிறாயா? கேள்விபபட்டிருக்கமாட்டாய்? அதற்கு மாறாக அவ்வடநாட்டுக் கூட்டம் தமிழக மக்களை அந்நிய நாட்டுக்குப போகும்படி செய்துவிட்டுத் தங்கம் கொழிக்கும் தமிழக மண்ணிலே அமர்ந்து சூழ்ச்சி செய்து வளத்தைப் பெருக்கிக் கொண்டு வறுமையைத் தமிழர்களுக்கு அளித்து வருகிறார்கள் என்றால், நம் இனத்தவரின் நிலையை நீ எப்படி எண்ணுகிறாய்? சூழ்ச்சி, சுரண்டல் என்று எண்ணுகிறாயா? வரலாற்றுப் பெருமையை வாய் வலிக்கும் அளவுக்குப் பேசிய இனம் வண்டமிழ்ச் சோலையை விட்டுவிட்டு உலகததின் எங்கோ ஓர் மூலையில் அடிமை வாழ்வு வாழ்வதையும், வடநாட்டு ஆதிக்கம் தமிழ்த் திருநாட்டிலே செலுத்தப்பட்டுச் செல்வங்களைச்சுரண்டிச் செல்வதையும் நினைக்கும்போதுதான் எவ்வளவு கொடுமைக்கு ஆளாகியிருக்கிறோம் என எண்ணத் தோன்றுகிறது? இப்பொழுது உணர்வாய் நான தமிழனாகப் பிறந்ததை ஏன் குற்றமாகக் கருதுகிறேன் என்று.

உனக்குத் தெரியும் என்னுடைய தமிழ்ப்பற்றும், நாட்டுப் பற்றும். வயிற்றுப் பசிக்கே சந்தர்ப்பம் கிடைக்காதபோது அறிவுப் பசிக்கா மனிதன் அலையப் போகிறான்? தேன் சொட்டும் திருக்குறளையும், சிலம்பையும், கலியையும், அகத்தையும் புறத்தையும் தமிழ்ப் பரம்பரையினரிடமிருந்து கேட்க முடியவில்லை நண்பா!... மாறாக அதே இனத்தின இலக்கியத்திற்குப் பெருமையூட்டிய இனத்தின் உள்ளங்களிலிருந்து சோகக் கீதமும், துயரக் கண்ணீரும்தான் வெளிவருகிறது. நாங்கள் விடும் கண்ணீர்தான் மலேயாவை வாழவைக்கிறது. எங்களது இரத்தக்கண்ணீரும், இரப்பர்ப் பாலும் சேர்ந்துதான் ஒருசிலரை மாளிகைவாசிகளாக ஆக்குகிறது. இங்கேநம் இனத்தவர் இரப்பர்த் தோட்டங்களிலும், தேயிலைத் தோட்டங்களிலும் படும் துயரத்தைப் பார்க்கும்போது உண்மையிலேயே உன் இளகிய மனசு கதறிவிடும். நேரில் கண்டு கண்டு என உள்ளத்தை இரும்பாக்கிக்கொண்டேன்! வேறுவழியில்லை. அதைத்தான் என்னால் செய்யமுடியும்?

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இன்பத்தமிழை வளர்த்த தாயகம் இன்று இந்தித் திணிப்பினால் அவதியுறுவதுபோல, உலகத்தில் உள்ளவர்களுக்கெல்லாம் வாழக்கற்றுக்கொடுத்து வாழ்ந்த ஓர் பெருங்குடி இன்று அந்நியனது முகத்தைப் பார்த்தவாறு ஏங்கிக்கொண்டிருக்கிறது என்றால், அதற்கு என்ன பொருள் என எண்ணுகிறாய்? உண்மையிலேயே வேதனைப்படுகின்றேன் நண்பா! ஆயிரக்கணக்கான மக்களோடு நானும் ஒருவனாக மலேயா இரப்பர்த் தோட்டங்களிலே வேலை செய்யும்போது நம் இனம் இந்த நிலைமைக்கு ஆளாகிவிட்டதே என்று எத்தனையோ முறை இரத்தக்கண்ணீரைச் சிந்தியிருக்கின்றேன்! பெருமூச்சும் விட்டிருக்கின்றேன்! இத்தகைய உழைப்பும் உறுதியும் தமிழகத்திலே செய்ய விடப்பட்டிருந்தால் நாமெல்லாம் மாளிகை வாசியாகவல்லவோ இருப்போம்? இவற்றையெல்லாம் நினைத்து நினைத்துத்தான செந்தமிழ் நாட்டின் சிறபபை எண்ணி எண்ணி உள்ளம் உடைகின்றேன்!

வாழத்தான் வந்தோம். நல்லதொரு மகிழ்ச்சியைக் கண்டோமில்லை. தமிழர்கள் தானே என்று தாறுமாறாக நடத்துகிறார்கள்! என செய்வது? நல்லதொரு ஆட்சி தமிழர்களுக்காக நடந்தால் எங்களைப் போன்றவர்கள் ஏன் இங்கு வந்து அல்லற்பட வேண்டும்? அடிமைகளாக, சுதந்திரமற்றவர்களாக வாழவேண்டும்? இனி இந்த நிலை மாறவேண்டுமானால் தமிழகம் தனியாட்சி நடத்தினால் தான முடியும்! அந்நிய நாட்டிலே நாங்கள் கொடுமைப்படுத்தபடுவதை எண்ணும்போது ஏன இன்னமும் உயிரை வைத்துக்கொண்டிருக்கவேண்டும் என்ற உணர்ச்சி தான் என் உள்ளத்தின் அடிப்பீடத்திலிருந்து உந்தி எழுகிறது. நான் நீண்டகாலம் இங்கே இருக்கப போவதில்லை. காரணம் அதற்குள் திராவிடநாடு தனியாட்சி பெற்றுவிடும். என்னைப் போன்றவர்களும் தமிழகம் வந்து இன்பமாக இருப்பார்கள்! அந்தப்பொன்னாள் நன்னாளைத்தான் எதிர்பார்த்த வண்ணமாக இருக்கின்றேன். நான் இங்கிருந்தவாறே சில வருத்தப்படக்கூடிய சம்பவங்களைக் கேள்விப்படுகின்றேன்! வட இந்தியாவிலிருந்து அகதிகளாக வருபவர்களுக்கு ஆர்வத்துடன்

ஆதரவு அளிக்கும் இந்திய சர்க்கார், தமிழர்கள் தங்கள் தாயகத்திற்கே விரட்டியடிக்கப்பட்டுத் தலை குனிந்து வரும்போது ஆதரவும், அன்பும் காட்ட மறுக்கிறதே என்று வருத்தப்படுகின்றேன் நண்பா! தமிழக செல்வத்தைக் கொண்டு வளம் கொழிக்கும் வடநாட்டார்கள் சூழ்ச்சி மனப்பான்மையை எண்ணிப்பார் நண்பா? இவ்வளவு பரந்த பூமியை விட்டு விட்டு 2000 மைல்களுக்கு அப்பால் உள்ள சிறிய நாட்டிற்கு தமிழ் மக்கள் குடும்பம் நடத்தச் செல்கின்றார்கள் என்றால். ஆட்சிமேல் குறை சொல்லுவதா? அல்லது வடநாட்டு ஆதிக்கம் பேரில் குற்றம் கூறுவதா? ஒன்றும் விளங்கவில்லை நண்பா! மாற்றார்கள் நினைப்பதுபோல் தமிழகம் சாதாரணபூமியா? மண்போட்டால் பொன் விளையும் பூமியாயிற்றே! வளம் கொழிக்கும் காவிரி. எங்கு நோக்கினும் நெல்லும், கம்பும், கேழ்வரகும், கமுகும், தென்னையும் மாவும், பலாவும், வாழையும்... இன்னபிறவும் இருந்தும் அந்த பூமியிலேயே பசிக்கொடுமை, வேலையில்லாத் திண்டாட்டம், உலவுகிறது என்றால் காரணம் என்ன என்று நினைக்கிறாய்? ஏமாந்தவர்களாகிவிட்டோம்! நல்லதொரு ஆட்சி, திராவிடக் கூட்டாட்சி நடைபெற்றால் வடநாட்டுக் கும்பல் வயிற்றைத் தடவிக் கொண்டு பணத்தைச் சுருட்டுவதற்காக வாயைப் பிளந்து கொண்டு சௌகார் பேட்டையிலும் இன்னும் முக்கிய நகரங்களிலும் ஆனந்தமாக அமர்ந்திருக்காது அல்லவா? நம் இனமும் வட்டிக்கடையை நோக்கிச்செல்லாதல்லவா? நாங்களும் இங்குள்ள இரப்பர், தேயிலைத் தோட்டங்களில் கண்ணீரைச் சிந்தி வயிறு வளர்க்கவேண்டிய அவசியமில்லை அல்லவா?

நீண்ட கடிதம் எழுதிவிட்டதாக நினைக்கின்றேன். தமிழர்கள் படும் துயரை எழுதினால் அது ஒரு பெரிய காவியமாகவே உருப்பெற்றுவிடும். இக்கடிதத்தைத் தமிழர்கள் வடித்த கண்ணீரால் தீட்டியிருக்கின்றேன்! இங்குள்ள நிலைமையைப்பற்றி எழுதுமாறு நீ குறிப்பிட்டிருந்ததால் இவ்வளவு தூரம் எழுதிவிட்டேன். சென்ற திங்களில்கூட இங்கிருந்து ஆயிரம் மக்கள் தாய்நாட்டிற்கு அனுப்பப்பட்டனர். வசதியற்றவர்கள் பாவம்! தமிழர்கள் தன் தாய்த்திருநாட்டிலே தலை நிமிர்ந்து வாழ வேண்டும்! திராவிடக் கூட்டாட்சி நடைபெறுவதைக்கண்டு என் உள்ளம் மகிழ்ச்சியடைய வேண்டும்! பசிக்கொடுமை, வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியவேண்டும்! வடநாட்டு ஏகாதிபத்தியம் ஒழிய வேண்டும். கனவு காண்பதாக நினைப்பாய்? இன்னும் சில ஆண்டுகளுக்குள் அந்த நிலைமையைத் தமிழகத்திலே நிச்சயம் நாம் பார்க்கத்தான் போகின்றோம். அந்த நன்னாள் வரும் வரை என் வாழ்க்கையில் நிம்மதி என்பதே இடையாது! நடமாடும் பிணமாகத்தான் உலாவி வருவேன். எவ்வளவோ இன்னல்களுக்கிடையில் இதை எழுதுகின்றேன். மற்ற நிலைமைகளைப் பின் அறிவிக்கின்றேன்.

வளர்க தமிழ்!
வாழ்க திராவிடநாடு!
வாழ்க தமிழினம்!!

இங்ஙனம்,
அன்புமறவா,
குணசேகரன்.

பரிசா? பாடமா?

—[பழனிவேலு]—

நல்ல காலை நேரம். அது ஒன்றும் பெரிய வீடு அல்ல. சிறிய ஓட்டு வீடுதான். அதன் ஓர் அறையின் மூலையிலே அவன் அசைந்து படுத்தான். என்ன ஒலி அது, காலை வேளையிலே?... ஆம் நிச்சயம் அவன் வாயிலிருந்து எழுந்த ஒலி தான்—இல்லை முனகல்!—ஆ!... அவன் உதட்டிலே என்ன அது, சிவப்பாக?—உதட்டுச் சாயம் சரியாகக் கழுவப்படவில்லையோ? சீ......... அவன் ஆணல்லவோ! அப்படியானால் கன்னத்திற்கும் கண்ணிற்கும் இடையே உள்ள பள்ளத்தாக்கில் ஒரு மச்சம் மாதிரி இருக்கிறதே, என்ன அது?... அட ......இவன் வைர வேலை செய்கிறவனோ? அந்த மச்சத்திற் கருகிலே இரண்டு மூன்று வைரத் துளிகள் ஒட்டிக் கிடக்கிறதே! ஏன் இந்தச் சந்தேகம்? நெருங்கித்தான் பார்ப்போமே! ஆ! காய்ந்துபோன இரத்தக்கறை அல்லவா அது?...அப்படியானால் உதட்டிலே கண்டது? ஐயோ கிழிந்து விட்டிருக்கிறதே? அதோ மறுபடியும் புரண்டு படுக்கிறானே? அப்படியானால் உயிர்! நிச்சயம் போகவில்லை.....பரவாயில்லை. நிதானமாக அவனை என்னவென்று விசாரித்துக் கொள்ளலாம்....அட....ஏன் அவன் சிரிக்கிறான்? ஒருவேளை சித்தம்...இல்லை. இருக்காது—இருக்கக் கூடாது......வாழவேண்டியவன் — வாலிபன். அப்படியானால் அந்தச் சிரிப்பிற்கு ஏதாவது பொருள் இருந்துதானே ஆகவேண்டும்? பேசமாட்டானோ—பேச முடியவில்லையோ...சீ...சீ அப்படியில்லை......நேற்று நடந்த நிகழ்ச்சிகளை எத்தனை இரத்தினச் சுருக்கமாக அவன் சிரிப்பின் மூலம் வாய் திறவாமல் கூறி விட்டான்?

*

உலகமே விசித்திரம் நிறைந்ததுதானே! கோள்களுக்கு இழுப்பாற்றல் உள்ளதால் தம் பாதையில் தவறாது செல்லுகின்றன. அதே ஆற்றலால்தான் நாம் வாழும் இந்த உலகமும் சுழலுகிறது...ஆனால் மனிதர்கள்?

வாழ்க்கையில் தோற்றுவிட்டவர்கள் எல்லோரும் வாழ்க்கையை வெறுத்து உயிரை மாய்த்துக்கொள்வார்களானால்!! யாருக்குத்தான் :வாழ்க்கையில் வெறுப்புத் தட்டுவதில்லை? ஒரு சமயம் இல்லாவிட்டால் இன்னொரு சமயம்...அப்படி எல்லோரும் தங்களை மாய்த்துக்கொண்டால் உலகமே இருண்டுவிடுமே! அப்புறம் அது தன் பாதையில் தவறாமல் சுற்றுவதில்தான் என்ன பெருமை இருக்கிறது? என்ன பொருளிருக்கிறது?

அதற்காகத்தானோ என்னவோ கோள்களுக்கு இழுப்பாற்றல் இருப்பது போலவே மனிதர்களை, ஆசை என்னும் ஆற்றல், அவர்களை விபரீதமான செயல்களைச்

செய்யாமல் தடுக்கிறது. ஆம்...... ஆசை...ஆசை...ஆசை. இந்த இரண்டெழுத்துக்களுக்குத்தான் என்ன மகிமை? 'இன்றைக்கில்லாவிட்டாலும் நாளைக்கு நல்வாழ்வு மலராதா' என்று வறியவன் ஏங்குகிறான். 'இந்த முறைதான் தோற்றேம். அடுத்த முறையாவது முயன்று படித்துப் பார்ப்போம்' என்று தேர்வில் தோற்ற மாணவன் தன்னைத் தேற்றிக்கொள்ளுகிறான். ஆனால் தேறிவிட்டவன்?......"நன்ருகப் படிப்பவன் அவன். அவனுக்கேது கவலை? அவனுக்கு மூளை இருக்கும் வரை அவன் மனதில் கவலை தோய இடமேது?"—இந்த இடத்தில்தான வாழ்க்கை நம்மை நோக்கி நகைக்கிறது! ஆம். அவர்களுக்கும் இருக்கிறது கவலை. அவர்களுடைய கவலை எல்லாம் மூன்றெழுத்தாலாகிய பணம்—ஆம். "பணமில்லையே மேல் படிப்புக்கு என்ன செய்வது?" என்று குமுறும் மாணவர் உள்ளங்கள் ஏராளம்! ஏராளம்! "அடிமை வேலை கூடச் செய்வேன், நான் படிக்க வசதிமட்டும் கிடைப்பதாயிருந்தால்—எனக்குமட்டும்கொஞ்சம் யாராவது உதவி புரியட்டும், அவரை என் வாழ்நாள் முழுதும் படம்போட்டு வைத்துத் திருவிழா எடுக்கிறேன்"......இப்படித்தானே படிக்கச் சந்தர்ப்பம் கிடைக்காத, ஆனல் படிக்க வேண்டும் என்று ஆசையுள்ள மாணவர் உள்ளங்கள் கேட்டுக் கேட்டு வெதும்புகின்றன? ஆனல்—நீ கட்டாயம் படிக்கவே முடியாது. ஐம்பது ரூபாயில் கணக்கன் பணி செய்யத்தான்வேண்டும் என்று சமூகம் கட்டளையிட்டால்? எந்த மாணவன் — ஆர்வமுள்ளவன்—விரும்புவான்? 'சீ...இதை விடத் திருடலாம்...கொலை செய்யலாம்......"நம்முடைய ஆற்றலை வீணகத் தேக்கிக் காலமெனும் ஞாயிறினுக்கு ஆவியாக்கும் இந்தச் சமூகத்தில் 'பொறுமை' என்னும் கரையை உடைத்துக் கொண்டு பாய்ந்து அதை மூழ்கடித்து அழித்துவிடலாமே"—இப்படித்தான் முதன் முதலில் நினைத்தான் அவன் — ஆனல் 'ஆசை' அவனைப் பிடித்து நிறுத்தியது.

"ஏன் வாழ்ந்துதான் பார்க்கலாமே!...என்னதான் நடக்கிறது என்று நோக்குவோமே! உலகத்துப் பேரறிஞர்கள்கூடத் துன்பப்பட்டவர்கள் தாமே, படிக்க வசதி தாராமல் துரத்தப்பட்டவர்கள் தாமே — நாமும் ஏன் வாழக்கூடாது?...நிச்சயம் வாழத்தான் வேண்டும். அப்படி முடியவில்லையானல், தானக-என்னிடம் சொல்லிக்கொள்ளாமல் என் உயிர் என்னைவிட்டு ஓடிப்போகட்டும்!" ...என்று தீர்மானித்துக்கொண்டான் மாணிக்கம்.

*

உட்கார்ந்த இடத்தில் இருந்துகொண்டே 'வேலை, வேலை' என்று சொல்லிக்கொண்டிருந்தால் வேலை கிடைத்துவிடுமா இந்தக் காலத்தில்? பல இடங்களுக்கும் சென்று முயன்று பார்த்தால்தானே? மாணிக்கம் கூட நேற்று அதற்காகத்தான் தெருவில் போய்க்கொண்டிருந்தான்...

*

அங்கே என்ன கும்பல்? ஒரே கூச்சலாய் இருக்கிறதே! சே...சே...ஆண்கள் பெண்கள் என்று கூட இல்லாமல் இப்படியா இடித்துக்கொள்வார்கள்? காட்டுமிராண்டிகள் காலத்திற்கே போய்விட்டார்களே! என்ன ஆவேசம் அவர்கள் முகத்திலே மிளிர்கிறது? இந்த ஆண்களுக்குத்தான் புத்தி மழுங்கிவிட்டதென்ருல், பெண்களுமா இப்படி?... 'நாணம்--மடம், அச்சம்--பயிர்ப்பு' இவர்களிடம் சீட்டு வாங்கிக்கொண்டதோ?...ஐயகோ....தமிழ் நாகரிகத்தை இந்த ஆங்கில நாகரிகம் வந்து என்னபாடு படுத்துகிறது?—இது, இந்தக்காலத்துக்கு அழகாமே! சரியாகத்தான் இந்தப் பெண்கள் உடை உடுத்துக்கொள்ளக் கூடாதா? அடடா! என்ன தவறு செய்துவிட்டேன்! தமிழ்நாட்டுப் பெண்களைக் கண்மண் தெரியாமல் தாக்கிவிட்டேனே? அவர்கள் நாகரிகத்தில் அமிழ்க்கப்பட்ட அரைகுறை ஆடை அணிந்துள்ளார்களா? அருகே வந்த பிறகல்லவா புரிகிறது! என் கண்களையே நம்ப முடியவில்லையே......அந்த இரவுக்கை கிழிந்தல்லவா போயிருக்கிறது? அடபாவமே......ஒரு சுற்றுக்குக் கூடப் போதவில்லையே அந்த பெண்மணியின் புடவை? சரி! அந்தப் பெண்தான் போகட்டும். மற்றுமுள்ளவர்கள் ஐயகோ! எல்லோருமேவா இந்த வேஷம்? ஒரு பெண்மணியாவது நல்ல ஆடை உடுத்திருக்க வேண்டுமே? ....

ஒருவேளை பணக்காரர்களே அற்றுப்போய்விட்டார்களா? ஏன் இப்படி இருக்கக்கூடாது? பணக்காரர்கள் இங்கு வராமல் இருந்திருந்தால்...ஆம் அப்படித்தான் இருக்கவேண்டும். அப்படி இல்லையானல்—சற்று முன் 'பஞ்சவர்ணக் கிளிகளை' ஏற்றிக்கொண்டு அன்னம்போல் மிதந்து சென்ற கார் ஒரு பிரமையாக இருந்திருக்க வேண்டும்! பணக்காரர்களே இல்லாமலிருந்தால் புடவைக் கடைவாயிலிலே பட்டுப் புடவைகளைக் கையிலேந்தி ஒயிலாக இறங்கிய பெண்கள் என் கற்பனைப் பெண்களாக இருக்கவேண்டும். அத்தனை பெண்கள், ஆண்கள் சென்ருர்களே காரில், ஏன் இந்தக் கூட்டத்தைப் பார்த்து நகைத்தார்கள்? ஒருவகை அருவருப்பைக் கூடக் காணமுடிந்ததே அவர்கள் முகத்தில்? ஒருவேளை அவர்கள் வேற்றுக் கோள்களில் இருந்து வந்தவர்களோ? அப்படித்தான் இருக்கவேண்டும்...

அதோ, ஒரு பெண்...பெண்ணு அவள்? எலும்புக் கூடுஅல்லவா!

எதிர்பாருங்கள்!

தோழர் ப. உ. சண்முகம் எம். எல். ஏ., அவர்கள்

அளிக்கும்

"காதல் பரிசு"

என்ற தொடர் கதை விரைவில் இடம்பெறும்.

அவளுடைய கண்கள் எங்கே காணோமே? சே... சே... இந்த கண்களை இல்லை என்று செலவிட்டேனே! வெட்கப் பட்டுக்கொண்டு அது புதைந்தல்லவா கிடக்கிறது? இந்தப் பெண் கூடவா கந்தல் உடைகளை ஏந்தி வரவேண்டும்? அதைவிட நிர்வாண...! ஐயகோ... அப்படிக்கூட நடமாடும்படி ஆகிவிடுமோ நிலை? யார் அந்தப் பையன்? அவளது அரைகுறை ஆடைகளையும் இழுத்துத் தொல்லை கொடுப்பவன்?... என்னவோ கூறி அழுகிருனே அவன்? என்ன மொழி பேசுகிருன்? விழுகிறது—விழுகிறது—காதில் விழுகிறது. 'பசி—பசி' ஓகோ பசியால் துடிக்கிருன் பையன். அவள் ஏதோ சமாதானம் கூறிக்கொண்டே நடக்கிருளே! கையில் என்ன அதுபை? புரிகிறது — புரிகிறது ஏதோ உணவுவாங்கிவரச் செல்கிருள். வாங்கி வீட்டிற்குச் சென்று தின்னலாம் என்கிருள்...என்ன? வந்தவள் ஏன் அந்த ஆள் பின்னுல் நின்றுவிட்டாள்? ஒருவேளை அவன், அவளை...! சே—சே மட்டமான கற்பனை—அந்த மனிதன் கூட நீண்ட நேரமாக அங்கே நின்றுகொண்டிருக்கிருனே -- ஆச்சரியம். ஆச்சரியம்—அருகே வந்த பிறகல்லவா புரிகிறது. அது ஒரு வரிசை. முன் நினைத்ததைப்போல் கூட்டமல்ல, அதோ மேலே தொங்குகிறதே அது என்ன? அடடா...இவ்வளவு நேரம் கவனிக்கவில்லையே 'நியாய விலைக் கடை'யாமே அது-சந்தேகமில்லை, அரிசி வாங்கத்தான் வந்திருக்கிருள். தெருவை அடைத்துக் கொள்ளாதிருக்க நெருக்கி வரிசையாக நிற்கிருர்கள். அதுதான் தூரத்தில் கும்பலாகப்பட்டது. வறுமையில் கூட அறிவு அவர்களுக்குப் போகவில்லையே! தமிழர்கள் அல்லவா அவர்கள்!

பளீர்...ஐயோ. யாரது? முன் பார்த்த அந்தப் பையன் அழுகிருனே! அவள் தாய் அடித்துவிட்டாள்...பாவம்...அந்தப் பையன் என்ன செய்வான்? பசி... பசி, என்று துடிக்கிருன்...அடியையும் வாங்கிக்கொண்டு கத்துகிருனே பசி—பசியென்று... அவள் முகத்தில்தான் எத்தனை கோபம்! மற்றவர்கள் எதிரே இப்படி நடந்து கொண்டோமே என்ற அச்சம்......சோறு போடத்தான் வழியில்லை. ஏன் அவனை அடித்துவிட்டோம் என்ற கருணை. ஆ... அதோ அவனை அவள் அணைக்கிருளே! என்ன இது—ஆம் புரிகிறது. பசிக் கொடுமை அடிக்க வைத்தது, பாசக் கொடுமை அணைக்கவைத்தது.

அப்பா! கால் கடுக்க எவ்வளவு நேரம் நின்றிருந்தாள் அவள்! "பாதிப்பேர் போய்விட்டார்கள். இன்னும் பதினைந்து...பதினறு... பதினேழே பேர்—ஓர் அரைமணி நேரம்—அப்புறம், வயிருர என் மகனுக்குக் கஞ்சி... நோய்வாய்ப் பட்டிருக்கும் அவருக்கும் கொடுப்பேன்... கொஞ்சம் ஆறுதலாய் இருக்கும்." அவள் முணுமுணுப்பது தெரிகிறது... அட என்ன அவள் முகத்திலே திடீரென மகிழ்ச்சிக் குறி? "அரிசி அளப்பவன் சமர்த்தன்தான்... இன்னும் இரண்டே பேர்... அப்புறம்..." முணுமுணுத்துக்கொண்டே தன் கைகளைத் தடவிக்கொள்ளுகிருளே... ஐயோ பாவம்... அரிசியைக் கையிலெடுத்து எத்தனை நாள் ஆயிற்ருே?

என்ன அவன் கை ஓய்ந்துபோய் விட்டதா? எத்தனை பேருக்கு மடமடவென்று அளந்து போட்டான்? அவனும் மனிதன்தானே? ஏன் அவன் வாயிலுக்கு வருகிருன்? ஏதோ கூறுகிருன்...... ஐயோ! காது கூசுகிறதே... துக்கம் தொண்டையை அடைக்கிறதே... இவ்வளவு நேரம் கால் நோக நின்றிருந்தாளே—இதுவா பரிசு? மகனைக்கூடப் பொறுமை இல்லாமல் அடித்தாளே—நோய் கொண்ட கணவனைவிட்டு வந்தாளே! இந்த அறிவிப்புத்தகுமா? இத்தனை பேருக்குப் போட்டாயே, இவள் முறை வந்ததுமா "இன்று அரிசி கொடுக்கவேண்டிய ,அளவு முடிந்தது" என்று கூறவேண்டும்? ...அடபாவி... அப்படிச் சொன்னவன் மனம் கல்லா? இல்லை அவனுக்கு அப்படிச் சொல்ல உத்தரவிட்டவன் மனம் வைரமா? அட அவள் விழுந்துவிட்டாளே...... சந்தேகமில்லை, மயக்கம்தான்...

அதோ ஒருவன் வெள்ளை உடுப்பு — கடைக்குள் நுழைகிருனே...அவனுக்கு அங்கே என்ன வேலை? "அநியாயம், அக்ரமம்"—யாரது? மாணிக்கமல்லவா கத்துவது? அட, ஏன் மாணிக்கம் கடைக்குள் பாய்ந்து ஏறுகிருன்? ஆ...! பார்த்துவிட்டான்-முன்பு சென்ற அந்த வெள்ளை உடுப்பு முதலாளியின் கையில் ஏதோ ஒன்றை மறைத்துக் கொடுக்கிறது... வெற்றி... ஒரு மூட்டையை ஒரு ஆள் சுமந்துவர அந்த வெள்ளுடை இராசநடை போடுகிறதே! அட உலகமே! ஒரு கண்ணில் சுண்ணாம்பும் மறு கண்ணில் வெண்ணெயுமாகப் பார்க்கிருயே? எல்லோரும உன் மக்கள் தாமே? ஐயோ... மாணிக்கம் ஏன் இப்படி இரைகிருன்? அவனை ஏன் ஓர் ஆள் பிடரியைப்பிடித்து நிறுத்தி இருக்கிருன? அதோ... அதோ... அவன் மற்றொரு கையில்— கோணி ஊசி.

"மரியாதையாகப் போய்விடு· எங்கள் விவகாரத்தில் தலையிடாதே"

"அக்ரமம், அநியாயம்"

ஆ!... மாணிக்கம்.

குத்திவிட்டானே... பாவி!

•

"நீ ஏன் இந்த வம்புக்குச் சென்ருய்"

"......................"

"ஆம் நீ சொல்வது எனக்குப் புரிகிறது... எனக்கும் அது உடன்பாடுதான்... மனிதனுக்கு இதயம் ஒன்று உண்டு என்கிருய்... கேட்கிறது என் காதுகளில். எனக்குக் கேட்டு என்ன பயன்? உலகுக்கல்லவா கேட்கவேண்டும்? நீ... தியாகி...மாணிக்கம்! உண்மையிலேயே நீ தியாகி... எவ்வளவு நேரம் நீ அந்தப் பெண்ணின் இன்னல்களைத் தூரத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்தாயோ? இல்லாவிட்டால் இவ்வளவு ஆவேசம் உனக்கு வந்திருக்காதே!"

"................."

"புரிகிறது. உன் புன்னகை புரிகிறது... வா... மருத்துவரிடம் போவோம்!"

★

என்னுடைய செல்வத்தை ஒருவன் திருடினுல் அவனுக்கு இலாபமுண்டு; நானும் அதைத் திரும்பப் பெற முடியும். ஆனுல் என்னுடைய கௌரவத்தை ஒருவன் குலைத்தால், அவனுக்கு இலாபமில்லை; நானும் அதைத் திரும்பப் பெறுவது அரிது!



இலக்கிய உலகில்....4

இலக்கியத் துறையில் திறனாய்வு பற்றிக் குறிப்பிடலாம். இத்துறையிலும் சில சிறு மதியாளர் புகுந்துள்ளனர். இவர்கள், தாங்கள் உயர்வாக மதிக்கும் குறிப்பிட்ட இலக்கியங்களையே எங்ஙனமாவது மிகப்பிரபலமாக்கி விட வேண்டும் என்ற ஆர்வத்தால் முயற்சி செய்வது விரும்பத் தக்கதாயில்லை.

'ஒப்பிட்டுத் திறனாய்தல்' என்ற பெயரில், புறநானூற்றுச் செய்யுள் ஒன்றினையும் கம்ப இராமாயணச் செய்யுள் ஒன்றினையும் இணைத்துப் பார்த்து, புறநானூற்றுப் புலவனைவிடக் கம்பனே குடியரசுப் பண்புமிக்க கவிஞன் என்ற முடிவிற்கு வருகின்றனர்.

புறநானூற்றில்,

“நெல்லும் உயிரன்றே
நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம்”

என்ற பாடலையும்,

கம்ப இராமாயணத்தில்,

'உயிரெல்லாம் உறைவதோர் உடம்புமாயின்' என்ற பாடலையும் ஒப்பிட்டு, புறநானூற்றுப் புலவன், நாடாளும் மன்னனை உயிர் என்று கூறி; தனி மனிதன் ஆட்சியை அதாவது முடியாட்சியை உயர்த்திக் கூறியதாகவும், கம்பன் குடிமக்களையே உயிர் என்று கூறி மக்களாட்சிப் பண்பைப் போற்றியதாகவும் கூறுவர்.

இதனை மேற்போக்காகக் காணுமிடத்து முற்போக்குக் கருத்துக்களை வழங்குவதில் சங்ககாலப் புலவனைக் கம்பன் விஞ்சிவிட்டது போலத் தோன்றும். ஆனால் ஆழ்ந்து காணும்போது வெளிப்படும் உண்மைவேறு. திறனாயப் புகுந்தவர்கள் புறநானூற்றின் மேற்படி செய்யுளின் இறுதியில் காணப்படும் சிறந்த குறிப்புரையின் நுட்பம் காணத் தவறிவிட்டனர்.

'மன்னன் உயிர்த்து' என்ற கருத்து உயிரை ஆக்கும் நெல்லும் நீரும் உளவாவது மன்னன் முறைசெய்து காப்பின் என்றதாம் என்பதே அக்குறிப்புரையாகும்.

வித்துவான். இரா. சொக்கலிங்கம்

இக்குறிப்புரையின் மூலம் புறநானூற்றுப் புலவன் 'மன்னன்' என்ற சொல்லைக் கொண்டு உணர்த்த எண்ணிய கருத்து யாது என்பதை அறிந்துகொள்கிறோம், இவ்விடத்தில் ஒரு ஐயம் தோன்றலாம். புறநானூற்றுப் புலவன் அரசாட்சி என்ற பொருளை நேரே உணர்த்தக்கூடிய சொல்லைப் பயன்படுத்தக் கூடாதா? கூடும்; ஆனால் அப்பழங்காலத்தில் பொருட் பெயர்களே தோன்றி, அவற்றினிடையாகப் பிறக்கும் பண்புப் பெயர்கள் தோன்றாமலிருந்திருக்கலாம். ஆனால் பிற்காலத்தில் அரசு—அரசாட்சி என்ற பண்புப் பெயர்களைச் சுட்ட வேந்து என்ற சொல் வழக்காற்றில் வந்துவிட்டது.

புறநானூற்றுப் புலவன் தன் காலத்து வழக்கிலிருந்த சொல்லைக் கொண்டே தனது கருத்தை வெளிப்படுத்த முயற்சி செய்திருக்கிறான் என்பதும், அரும்பதவுரையாசிரியர் தமது சிறந்த புலமையால் மூல ஆசிரியரின் கருத்தறிந்து குறிப்புரை வழங்கியிருக்கிறார் என்பதும் அறியத்தக்கன.

இன்றைய இலக்கியத் திறனாய்வில் இங்ஙனம் நடுநிலை தவறிய சில ஆய்வுகள் நிகழினும் ஆக்கசுரமான திறனாய்வுகளும் ஒரு பக்கத்தில் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

எடுத்துக்காட்டாக முதற்குறள் உவமை — (கு. கோதண்டபாணி பிள்ளை,) சிலப்பதிகாரச் செய்தி— (ம. ரா. போ. குருசாமி,) பாரதி கவித்திறன்—(மு. கோவிந்தசாமி) கண்ணகி — (மு. வ.) கம்ப இராமாயண ரசனை—(வ. வே. சு. ஐயர்) தசரதன் குறையும், கைகேயி நிறையும் — (நாவலர் சோமசுந்தர பாரதியார்) போன்ற நூல்களைக் கூறலாம்.

இவற்றில் 'முதற்குறள் உவமை' என்னும் நூல் காலங் கடந்து பறக்கும் வள்ளுவம் என்னும் புள்ளினை சைவசித்தாந்தக் கூண்டிற்குள் அடைக்க முயற்சி செய்யினும் முதற்குறளின் உவமையை ஆய்ந்து காணும் திறன் நன்றாக உள்ளது.

'சிலப்பதிகாரச் செய்தி' புதிய தமிழகம் திறனாய்வுத் துறையில் எழுப்பும் இனிய குரல்! ஒன்றுபட்ட — பிணக்கற்ற — பூசலற்ற தமிழகமே சிலம்பின் முதல் ஒலி என முழங்குகிறது. இத்திறனாய்வு நூல் அவ்வப்போது சமுதாய நாட்டு நிலைகளுக்கேற்றவாறு திறனாய்வு அமைதல் வேண்டும் என்ற கொள்கைத்தாகம் கொண்டோர்க்கு இனியதோர் இன்பச் சுனை!

★

எந்த ஒரு தனி மனிதனும் சமுதாயத்திலே நான்கு பேர் மத்தியிலே—பேசிப் பேசித் தனது செயலை மூடிவைத்துக் கொண்டுவிடுகிறான். ஆனால் சரித்திரமோ ஒவ்வொரு மனிதனையும் அவனது செயலைக்கொண்டுதான் மதிப்பிடுகிறதே ஒழிய பேச்சைக் கொண்டன்று.

“ஓட்டுக் கதை”

அணில் முதுகில் வரிகள் இருக்கின்றதே, அதற்கு வரலாறு உண்டு. ஆதி முதலில் அணில் இனத்திற்கு முதுகில் வரிகளே இல்லாமலிருந்ததாம். இராமபிரானுக்குச் சேதுபந்தனம் அமைக்கப் பாடுபட்ட வானரங்களில் தானுமொரு அங்கமாக அணிலொன்று பங்குகொண்டு பெரிதும் துணைபுரிந்ததாம் அதற்காக அதனை அன்போடு தன் விரல்களால் தடவிக் கொடுத்தாராம் இராமர். அவர் ஆண்டவன் அவதாரம், ஆனதால் அணில் முதுகில் கோடுகள் வீழ்ந்துவிட்டவிட்டதாம். அதுபோது எல்லா அணில்களுக்குமே கோடுகள் தோன்றியதாம். பின்னர் வரன்முறையாக வாழையடி வாழையாக அதன் சந்ததிக்கே அந்தக் கோடுகள் உரித்தாகிப்பிறப்பியல்பாகவே அமைந்துவிட்டதாம்.

மனிதனுக்கு முதுகெலும்பு அமைந்ததற்குகூட ஒரு காரணம் உண்டு. கொற்றவன் குலசேகரப் பாண்டியன் காலத்தில் வைகைகரைபுரண்டுபெருக்கெடுத்தோடியது. வெள்ளம் தடுக்க வீட்டிற்கொரு ஆள் வந்து வேலை செய்யவேண்டுமென்றது வேந்தனின் கட்டளை. பிட்டு விற்று வயிறு வளர்க்கும் மூதாட்டி ஒருவள் ஆண் மகனை இல்லாத தனை வீட்டு பங்கிற்கு ஒரு கூலியாளை நியமித்தாள். நியமிக்கப்பட்டவர் வேறு யாருமில்லை. நெற்றிக்கண் நிமலனே—பிறைசூடிய பரமனே கூலியாக உருமாறி வந்திருந்தார். கூலியாகப் பணம் எதுவும் கேட்காமல் பசிதீரப் பிட்டுமட்டும் கொடுத்தால் போதுமென்று பாட்டியிடம் கேட்டு வயிறு புடைக்கப் பன்முறை உண்டு ஒப்புக்கு ஓரிரண்டு தட்டு மண்சுமந்துவிட்டு கண் அயர்ந்துவிட்டார் கங்கையணிந்த சிவனார். கொற்றவன் வந்து பார்வையிட்டான். கோபம் மீறிட்டுக்கொண்டு வந்தது. குறட்டை விட்டுத் தூங்குபவர் கண் மூன்றுபடைத்த கையிலைமலைவாசர் என்றறியாத காரணத்தால், கைப்பிரம்பால் ஓங்கி முதுகின்மீது அடித்தான். அந்த அடியானது ஆண்டவனுக்கே பட்டுவிட்டதாகையால் அவனிவாழ் மக்களுக்கெல்லாம் பட்டது. முதுகில் தடிப்பாக எழுந்தது முடிவில் முதுகெலும்பாக அமைந்தது.

ஆற்றுமணலை அறுபது மார் கயிறாகத் திரிப்பதினும் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதினும் மோசமானகதைகளாக அல்லவா இருக்கின்றன. இராமரால்தான் அணில்

—[நா. வேலன்]—

இனத்திற்கு வரிகள் பிறந்தது என்றால் அதற்கு முன்பிருந்த அணில்களுக்கெல்லாம வரிகளே இல்லையா? இல்லை என்று சொன்னால் மட்டும் போதுமா? அதற்கு ஆதாரங்கள் என்ன? பிட்டுக்கு மண் சுமந்த பரமனுக்குப் பிரமபடி வீழ்ந்த பின்புதான் மனிதனுக்கு முதுகெலும்பு வளர்ந்தது என்றால் அந்த நிகழ்ச்சிக்கு முந்திய மக்களுக்கு முதுகெலும்பே கிடையாதா? அப்படியானால் அவர்கள் எப்படி எழுந்து நின்றார்கள். எவ்விதம் வேலை செய்தார்கள்? இது போன்ற வினாக்கள் நம உள்ளங்களில் எழத்தான் செய்கிறது, நம் அறிவியக்கத்திற்கு சொத்துக்களே இத்தகு வினாக்கள்தானே. இதற்காகத்தானே நமக்கு “இதிகாசம் இகழ்வோர்” என்ற விருதும் வழங்கப்பட்டிருக்கிறது. வழங்கபபட்ட அந்த விருதைத வரவேற்றுக்கொள்ளும் இதயம நமக்கு உண்டு என்பதைப் புரிந்துகொள்ளாதவர்களுக்கு நம் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு மேற்சொன்ன இரு புராணக் கதைகளுடன் மேலும் இரு கிராமக் கதைகளைக் கவனிப்போம்.

முன்போர் காலம் வானம் தலைக்குத் தடுக்கும் அளவுக்கு மிகவும் தாழ்வாக இருந்ததாம். எந்த விதமான வேலை செய்வதற்கும் அது பெரிதும் இடையூறாகவே இருந்ததாம். பெண் ஒருத்தி உரலில் உலக்கையால் மாவிடிக்கும் போது மிகவும் இன்னலுற்று இறுதியில் பெருங்கோபமுற்று ‘தூ’ என்று காரியுமிழ்ந்து “மானங்கெட்ட வானமே மேலே போ” எனக்கடுஞ்சொல் பகர்ந்தனளாம். உடனே அது மிகவும் மேலே சென்றுவிட்டதாம்.

வானம் என்பது சூன்யமாக இராமல் பந்தல்போல் பரந்து கிடக்கிறது என்று கருதியிருந்தவர்கள் காலத்திலே கட்டிவிட்ட கட்டுக் கதைதான் இது என்பது சொல்லாமலேயே விளங்குகிறது.

பூனை மலம் கழித்த உடனே அதை மண்ணில் மூடி மறைப்பதை அனைவரும் பார்த்திருக்கிறோம். அதற்குமோர் கதையுண்டு.

பூனை, நரிக்குப் பலவிதமான பண்புகளையும் முறைகளையும் பயிற்றுவித்துக் காட்டியதாம். எனினும் ஒரு வித்தையையாவது உனக்கு நான் காண்பிக்காமல் மறைத்து வைத்தால்தான் நீ என்னை மதிப்பாய், இல்லை என்றால் அவமதிப்பாய் என்று பூனை நரியிடம் கூறி, மரம் ஏறும் முறையை மட்டும் காண்பிக்காமலேயே விட்டுவிட்டதாம். அதற்கு நரி, நான் உன் மலத்தை தின்றாவது மரம் ஏறும் துறையைத் தெரிந்துகொள்வேன — இது உறுதி’ என்று கூறியதாம். அதற்காகத்தான் பூனை தன் மலத்தை எப்போதும் மூடி மறைக்கின்றதாம்.

எப்படிக் கதை?

இப்படி நரிக்கும் பூனைக்கும் வாக்குவாதம் நடைபெறும்போது பார்த்திருந்தது யார்? கேட்டிருந்தது யார். ‘நான்தான்’ என்று ஒருவர் சொன்னாலும் அதை நம்புவது யார்? இப்படி எண்ணற்ற வினாக்களைத்தான் விடுக்கத்

தோன்றுகிறது. இவைகள் போன்ற ஆயிரமாயிரம் கட்டுக் கதைகளைக் கேட்கும்போது, அதே நேரத்தில் இக்கதைகளைப் பற்றிய ஓர் பேருண்மையும் நம்மால் கண்டுகொள்ள முடிகிறது.

அதாவது அமைந்திருக்கும் இயல்பிற்கு — நிலைமைக்கு — சூழ்வுக்கு தக்கவாறு ஏதோ அறிவில்லாத முறையில் அருத்தமில்லாத வகையில் தொடர்பை உருவாக்கி ஒட்டிவைக்கப்பட்டவைகள்தான் இந்தக் கட்டுக் கதைகள் என்பதுதான் அந்த உண்மை.

அணிலுக்கு வரிகள் இருக்கிறதா? சரி அது இராமர் தடவிக் கொடுத்ததால் தோன்றியது என்று ஒட்டிவிட்டால் கதை தகுதியாகத்தான் இருக்கும்.

மனிதனுக்கு முதுகெலும்பா? சரி, அது மகேசனுக்குப்பட்ட பிரம்படியால் பிறந்தது என்று பொருத்திவிட்டால் அது பொருத்தமாகத்தான் இருக்கும்.

பெண்ணொருத்தியின் சாபத்தால் விண்ணானது உயரப்பறந்து விட்டது என்று உருவாக்கிவிட்டால் கதை வண்ணமாக அல்லவா இருக்கும்.

நரி பூனையைப்போல் இருக்கிறது, நரிக்கு மரம் ஏறத்தெரியாது பூனை தன் மலத்தை மண்ணிட்டு மறைக்கிறது. சரி இப்படிப்பட்ட இயல்பைக்கொண்டு நரி பூனையிடம் கல்வி பயின்றதாகக் கதை புனைந்துவிட்டால் அதை நம்பாமலா போய்விடுவர்? என்ற எண்ணங்களிலே ஒட்டி வைத்து உருவாக்கப்பட்டவைகள் தான் இந்த ஒட்டுக்கதைகள். இத்தகைய கதைகளால் அறிவு அழிவு திசைக்குத் திரும்புமே யன்றி அகலமடையக் காரணம் இல்லை.

காலமானது இந்தக்கதை அமைத்தவர்களுக்கு மட்டும் பாழானதோடல்லாமல் அதைச் சொல்பவருக்கும் கொள்பவருக்கும் கூடப் பாழாகிவிடுகிறது.

எந்தக் காலத்திலோதான் அப்படி கதை வளர்த்தவர்கள் இருந்தார்களென்றால், இப்போது அதைவிட மட்டமான ஒட்டுக் கதைகளை உருவாக்கும் சூரர்கள் இல்லாமலில்லை.

யார் அந்தச் சூரர்கள்? அவர் தம் கதைதான் என்ன? இதோ அதற்குபதில்.

காலம் வீணானாலும் சரி, அதனால் இலாபம் இல்லாமற் போனாலும் சரி ஒட்டுக் கதைகளை நாங்கள் கட்டித்தான் தீருவோம். நாட்டவர் அதனைக் கேட்டுத் தான் ஆகவேண்டுமென்று கோட்டம் அமர்ந்த காங்கிரசார் மதி யிழந்து மமதையடைந்து மனமொன்று சொல்லொன்று செயலொன்று என்ற முறையிலே நடந்து, உண்டாகும் நிலைமைகளுக்குத் தக்கவாறு ஒவ்வாத பொருத்தங்களைப் பிணைத்து அரசியலிலே ஒட்டுக் கதைகளை உருவாக்கி வெளியிட்ட வண்ணமே இருக்கின்றனர். வெந்த புண்ணிலே வேலேறுவதைப் போலத்தான் இருக்கிறது நமக்கு அது.

வரிகள் விதிப்பதும் ஊரெல்லாம் பிச்சை எடுப்பதும் போதாதென்று உலக நாடுகளிலெல்லாம் பிச்சை எடுத்து ஐந்தாண்டுத் திட்டம் என்ற பெயரால் டில்லி பீடம் வடக்கை வாழவைத்துக் கொள்கிறது. ஆலைகள் ஆயிரம், சோலைகள் பலப்பல, சாலைகள் ஏராளம் நிறுவிக்கொள்கிறது. பாலை நிலமெனக் காட்சியளிக்கும் தென்னாட்டிற்குப் பாங்கான திட்டமேதும் செயல்படுத்தவில்லை. இக்கொடுமை நடக்கலாமா என டில்லியை உலுக்கிக்கேட்க சென்னை அமைச்சர்களில் ஒருவருக்கேனும் இதயத்தில் துணிவில்லை என்ற உண்மை நிறைந்த இந்த அவல நிலைமை நாம் அடிக்கடி எடுத்துக் கூறவும் தவறியதில்லை.

இந்த நிலையையும் சூழ்வையும் பிணைத்துதான் நமது தொழிலமைச்சர் வெங்கட்டராமனார் அவர்கள் சென்னை பெரம்பூரில் நடைபெற்ற கூட்டமொன்றில் ஒரு ஒட்டுக் கதை வெளியிட்டிருக்கிறார்.

இதோ அந்தக்கதை.

"வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது பெரிய தொழிற்சாலைகள் தென்னாட்டில் இல்லை" என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கூறுகிறார்கள். பொருளாதாரம் தெரிந்தால் அவர்கள் இவ்வாறு கூறமாட்டார்கள். மக்கள் செய்யக்கூடிய வேலைகளையெல்லாம் பெரிய இயந்திரங்கள் செய்து முடித்துவிட்டால் வேலையில்லாத் திண்டாட்டமல்லவா அதிகரிக்கும். வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதுதான் எங்கள் இலட்சியம். அதற்காகவே இங்கு ஆலைகள் எழுப்ப நாங்கள் விரும்பவில்லை"

பார்த்தீர்களா எத்துணை எழில் பட ஒட்டிக்கட்டிக் கதையை உருவாக்கி இருக்கிறார் அமைச்சர்.

தென்னாட்டில் திட்டங்கள் இல்லாததற்குக் காரணம் இதுதான் என்று இந்த ஒட்டுக் கதை மூலம் வெளியிட்டிருக்கிறார். கதையை பொருளாதார ரீதியில் அமைத்து விட்டதாக அவர் பெருமைப்படலாம். அதோடு தி.மு.க-வையும் ஒரு போடுபோட்டுவிட்டோம் என்று பூரிப்பும் கொள்ளலாம். ஆனால் கதை புனைந்த அமைச்சர் இதைப் படிக்கட்டும் வெட்கித் தலை குனியட்டும்.

"துணி ஆலைகளில் இவ்வாண்டில் 2500 இயந்திரத் தறிகள் புகுத்தப்படும். இதேமாதிரி அடுத்த இரண்டாண்டுகளிலும் ஆண்டிற்கு 2500 இயந்திரத்தறிகள் வீதம் துணி ஆலைகளில் பொருத்தப்படும். இந்தியத் துணி ஏற்றுமதியை அதிகப்படுத்தவே இந்த யந்திரத் தறிகள் புகுத்தப்படுகிறது. ஆனால் இதன் காரணமாக ஆலைகளில் ஆள்குறைப்பு கிடையாது"

இது அமைச்சர் உரை நிகழ்த்திய தினமே வடக்கு அரசாங்கக் கமிட்டி வெளியிட்ட சேதியாகும். இத் திட்டம் அமல் நடத்தும் காலை தென்னாட்டிற்குப் பங்கு அதில் இல்லாமலிருந்தாலும் அல்லது சென்னை அரசாங்கம் அதைப் பின்பற்றாமலிருந்தாலும் அமைச்சர் கூறும் அரசியல் ஒட்டுக்கதைக்கும், புராணங்கள் கூறும் ஆண்டவன் ஒட்டுக் கதைகளுக்கும் நடுவே சிறிதளவுகூட இடைவெளி இருப்பதாகத் தெரிவில்லை.

நகராட்சித்தேர்தலும் நாமும்!

நகரமன்றங்களிலே, கட்சி அரசியல் புகுத்தப்படக்கூடாது என்று காங்கிரஸ் கட்சியினர், சொல்லி வந்தார்கள். காங்கிரசின் முன்னோடிகளாயிருப்போர், இக் கூற்றினை, சென்ற சில நாட்கள்வரையில், வலியுறுத்தத் தவறவில்லை. "நகர மன்றங்கள், அந்தந்த நகரங்களின் முன்னேற்றத்தையும் சுகாதாரத்தையும் கவனிக்கவே இருக்கின்றன. அங்கே, கட்சிப் பிரச்னைகளுக்கு இடமில்லை. அவைகளைக் கவனிக்கச் சட்டசபை இருக்கிறது. கட்சிகள் ஒவ்வொன்றும் தத்தமது கொள்கைகளைச் சொல்லி, வாதாடவேண்டிய இடம் சட்டசபையே ஒழிய, நகரமன்றங்களோ பஞ்சாயத்துக் கூடங்களோ அல்ல" என்று தெளிவாகச் சொல்லி வந்தார்கள். அரசியல் நோக்கம் உள்ளவர்களாயிருந்தாலும், நகர மன்றங்களிலே சேவை செய்யச் சென்றால், அந்தச் 'சட்டை'யைக் கழற்றிவைத்து விடவேண்டும்; அப்போதுதான் விருப்பு வெறுப்பின்றி, நகர முன்னேற்றத்துக்காகப் பாடுபட முடியும். நகரசபைகள், அரசியல் மேடையாக்கப்பட்டால், வேண்டாத விவாதங்களும், விருப்பு வெறுப்பும்தான் வளருமேயன்றி, நன்மைகள் குறையும். நாள்தோறும், வேற்றுமையுணர்ச்சியும் விரோதமும் குரோதமும் உற்பத்தியாகி, எந்த நோக்கங்களுக்காக, நகரசபைக் கூடங்கள் அமைக்கப்பட்டனவோ, அந்த நோக்கங்களுக்கே மாசும் கேடும் உண்டாகும் என்கிற உண்மையை உணர்ந்திருப்பவராக, அடிக்கடி தென்பட்டார், அமைச்சர் சுப்பிரமணியம். நகரமன்றங்களிலும், அதுபோன்ற உள்நாட்டுத்துறை சிறு அமைப்புகளிலும், கட்சி அரசியல் புகக் கூடாது என்பதை எடுத்துச் சொல்லிவந்தார். சட்டசபையில் பேசும்போதுகூட, ஒரு தடவை, சொன்னார், "ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களிலே அரசியல் கட்சிகள் போட்டியிடுவதென்பதை நான் விரும்பவில்லை. இந்த விஷயத்தில் எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்று கூடி, தத்தமது கட்சியின் பெயரால் யாரையும் தேர்தல்களில் நிறுத்துவதில்லை என்கிற முடிவுக்கு வந்தால்கூட நல்லது" என்று.

சி. என். ஏ.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இந்தக் கூற்று வரவேற்கப்பட்டது மட்டுமல்ல; உறுதி மொழியும் வழங்கப்பட்டது. அமைச்சர் விரும்புவது போல, சகல அரசியல் கட்சிகளும் ஒன்றாகக்கூடி, இப்படியொரு பொது முடிவுக்கு வருவதென்றால் நாங்கள் தயாராயிருக்கிறோம் என்று சொல்லப்பட்டது. இப்படியொரு முடிவுக்கு வருவது, வரவேற்கப்படக் கூடிய ஒன்று என்றே, நகரமன்றங்களிலும் அவைகளைச் சார்ந்த சிற்றூர் பேரூர் மன்றங்களிலும் கட்சி அரசியல் புகக்கூடாது எனக் கருதுவோர் எல்லாம் எண்ணினர்; விரும்பினர்.

ஆனால், காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே, இதை விரும்பாத 'கோஷ்டி'யொன்று இருக்கிறது என்பது, இப்போது தெளிவாகியிருக்கிறது. அந்தக் கோஷ்டியில், அமைச்சர் சுப்ரமணியத்துக்குச் செல்வாக்கு எதுவும் இல்லை என்றும் தெரியவருகிறது. அமைச்சருடைய கூற்றையும் விருப்பத்தையும், வரவேற்கத்தக்கது நல்லது என்று பிறர் கருதினாலும்; தேர்தல்களை வைத்துக் காலட்சேபம் நடாத்துவோரும், அவைகளின்போது 'சூத்ரதாரி'யாக இருந்து சுருட்டும் தொழில் புரிவோரும், தத்தமக்கு ஆங்காங்கே ஒரு இடம் இருக்க வேண்டுமென விரும்புவோரும், வேட்டையாடுபவர்களும், வேண்டிய பணச் செலாவணி புழங்கும்படி வைத்துக்கொள்ளுவோரும், அமைச்சரின் கூற்றை, விரும்பவில்லை, காங்கிரஸ் கட்சியில். இப்படிப்பட்ட கோஷ்டியை, கட்டாயப்படுத்தி இணங்கவைக்கும் 'சக்தி' இல்லைப்போலும், அமைச்சர் சுப்ரமணியனாரிடம்.

கொள்கை வகுக்கும் கோமானாக, தோழர் சுப்பிரமணியனாரைக் கருதவில்லை, காங்கிரஸ் கட்சியில், அவருக்கு அங்கு தரப்பட்டிருப்பது, குறிப்பெடுக்கும் குமாஸ்தா பதவிதான்!!

கொள்கை வகுக்கும் கோட்டத்துக்குள் அடியெடுத்து வைக்க நமது அன்பிற்குரிய நண்பர் ஆசைப்பட்டாலும், அவருடைய வழிகள், வேட்டைக்காரர்களாலும் சமய சஞ்சீவிகளாலும் அடைபட்டுப் போகின்றன.

சட்டசபையிலே அவர் செய்த சங்கநாதம், செவிடர்கள் காதில் ஊதியதாகப் போய்விட்டது! காங்கிரஸ் கட்சியை ஆட்டிப்படைக்கும் வல்லாளர்கள், வரப்போகும் நகரமன்றத் தேர்தல்களிலே கட்சியின் பெயராலேயே நிற்பது என்று முடிவு கட்டிவிட்டனர்!!

இப்படியொரு முடிவுக்குத் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் வருவதை, அமைச்சர் சுப்ரமணியம் எதிர்த்ததாகவோ, ஆட்சேபித்ததாகவோ தெரியவில்லை! ஒருவேளை, "நாம் சொன்னால் யார் கேட்கப்போகிறார்கள்?" என்பதாலேயே, எதுவும் சொல்ல

வில்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது. காங்கிரஸ் கட்சி, நகராட்சி மன்றத் தேர்தல்களிலே போட்டியிடுவதென்று திட்டவட்டமாக முடிவுசெய்து, தேர்தல் முரசையும் தட்டத் துவங்கி விட்டது.

திராவிட முன்னேற்றக் கழகம், நீண்டகாலமாக நகராட்சி மன்றங்களில் கட்சி அரசியல் புகக்கூடாது என்று சொல்லிவரினும், காங்கிரசாரின் இப்போக்கினைக் கண்டுசிந்திக்க வேண்டிய நிலைக்கு வந்தது. எதேச்சாதிகாரமும், ஒரு கட்சி ஆட்சியும், மக்களாட்சி மாண்புக்கு ஊறு தேடுவன வன்றோ! அங்கிலே, உள்நாட்டுத் துறை அமைப்புகளிலும் உருவாவதை, ஜனநாயகம் விரும்பிகள் தடுக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

ஏன காங்கிரஸ், இந்த முடிவைச் செய்துள்ளது என்று பார்த்தால், பதில் எளிதில் கிடைக்கும். சட்டசபை போன்ற இடங்களிலே "எதுவும்" பெருதவர்களாயிருக்கும் காங்கிரஸ் பிரமுகர்களுக்கு, ஏதாவது வரப்பிரசாதம் கொடுத்ததாக இருக்கக் கட்டும், என்பதுதான் முக்கிய காரணமாக இருக்கவேண்டும்.

நகரங்களிலே இருக்கும் பல பிரமுகர்கள் தங்களுக்குப் பல வகைகளில் பயனபடுகிறவர்கள்; அவர்களை அதிருப்திக்கு ஆளாக்கக்கூடாது என்று காங்கிரஸ் கருதுகிறது. ஆங்காங்கே இருக்கும் வசதிபடைத்தவர்களையும், பணக்காரர்களையும் இழுத்துப் போட, இந்த அமைப்புகளைப் பயன்படுத்த விரும்புகிறது.

தூதர்கள் வலைவீசி, இது போன்ற ஆட்களைத் தேட ஆரம்பித்துவிட்டார்கள்! தேர்தல் நேரங்களை வைத்தே காலந்தள்ளும் காங்கிரஸ் கண்ணியவான்கள், வேட்டைகளுக்கான ஆயத்தங்களில் இறங்கிவிட்டார்கள். பணக்காரர்களுக்குத் தாம்பூலங்கள் தரும் வாடிக்கை துவங்கிவிட்டது. பாடுபட்டவனும் பழைய காங்கிரஸ்காரரும் ஒதுங்கியிருக்கும்படி செய்யப்பட்டு, இந்தப் பதவி வலைவிரிக்கும் வேலை ஒவ்வொரு ஊர்களிலும் மும்முரமாகச் செய்யப்பட்டு வருகிறது.

ஆட்சியிலிருக்கும் கட்சி என்பதால் இதனைச் சாமர்த்தியமாகச் செய்திட முடியும்! சர்க்காருடன் சரசமாடி, காரியங்களைச் சாதிப்பதில் கவலையுள்ள கனவான்களின் கைலாகினை எளிதில் பெறவும் இயலும்!! — இந்த வாய்ப்பு, தி. மு. க.வுக்குக் கிடையாது என்பது மட்டுமல்ல, விரும்பாத ஒன்றும் ஆகும்.

எவரும், காங்கிரஸ் அபேட்சகராக நின்றுவிடலாம்!

கதரைத் தொட்டறியாமலிருந்தவர்களானாலும், கள்ளுக்கடை வைத்து நடத்தியவர்களானாலும், பணக்காரத் தன்மை கொண்டவர்களானாலும், பிற்போக்குவாதியானாலும், கள்ளமார்க்கெட்டில்கொள்ளை இலாபம் சம்பாதித்தவர்களானாலும், சமூக விரோதியானாலும், பணம் செலவழிக்கும் வாய்ப்பும் வசதியும் பெற்றவர்கள் யாராயினும் காங்கிரஸ் அபேட்சகராகிவிடலாம்.

தி. மு. க. இதுபோன்ற காரியத்துக்காக இயங்கும் இயக்கமல்ல. தகுதியுள்ளவர்களையும், மக்களுக்குப் பாடுபடும் தொண்டர்களையும், அவர்தம் தூய்மையான உழைப்பின அளவுகோலாக வைத்தே ஒருவரை, அங்கீகரிக்கும். பணங் கொடுப்பவர்களுக்கும், பணம் செலவழிபபவர்களுக்கும் இடம் தருவோம் என்று ஏலம்போடாது தி. மு. க. தகுதியையும், சேவையையுமே கணக்கிட்டுப்பார்க்கும்.

கட்சிச் சார்பில் இந்தத்தேர்தல்களை நடாத்திட வேண்டுமெனக் காங்கிரஸ் வெளியிட்டதும், தி. மு. க.விலுள்ள ஆர்வமுள்ள தோழர்களும், நாமும் அவ்விதமே பங்கெடுக்க வேண்டியதுதான என்று தெரிவித்தனர்.

இப்படி நாமும் பங்குகொள்ளாவிடில், நகராட்சி மன்றங்களிலும், ஒரு கட்சி ஆட்சியைக் காங்கிரஸ் நிறுவும். சீமான்களின் இடமாகவும், பணம் செலவழிப்போரின் கூடங்களாகவும் அவை ஆகும்.

நாமே தேர்தலில் நின்றோ, காங்கிரசுடன் போட்டிபோடத் தயாராக உள்ளவர்களை ஆதரிப்பதன் மூலமோ, காங்கிரசின் எதேச்சாதிகாரத்துக்கு 'மூக்கணாங்கயறு' போட்டாகவேண்டும்.

இப்படிப்பட்ட கருத்துக்கள் நமதுதோழர்களிடமிருந்துவரவே, முக்கியமானவர்களையும் வெளியூர்த் தோழர்களையும், இதுபற்றி ஆலோசிக்கக் கூட்டினார், நமது பொதுச்செயலாளர். இந்தக் கூட்டத்தில், அரிய ஆலோசனைகள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

நகரசபைத் தேர்தல்கள் என்றால், அங்கு பணம்தான விளையாடும்; சாதிதான் தலைவிரித்தாடும் என்பது, நாம் அறியாததல்ல. ஒவ்வொரு நகரத்திலும், தங்களுடையதென ஒருசில இடங்களைச் 'சிலர்' எப்போதும் வைத்திருப்பதையும், சாதியின் பெயரைச் சொன்னால் 'ஜெயித்து'விடலாம் என்கிற இடங்களிருப்பதையும் அறிவர், நமது தோழர்கள்.

நமது நாட்டில், பொதுவாக இப்படிப்பட்ட நகரசபைத் தேர்தல்கள் என்றால், ஒரு சில பெரிய பணக்காரர்களின் விவகாரமாகவே இருந்து வருகிறது! ஒரு நகரத்தின் 'தலைவிதி'யை அந்த ஊரிலுள்ள அரைடஜன் பணக்காரக் குடும்பங்களே, பங்குபோட்டுக்கொள்ளும் சூழ்நிலை இன்னும் நீடிக்காமலில்லை.

சட்டசபைத் தேர்தல்களைப் போல, கொள்கை விளக்கம் பெற்று ஓட்டளிக்கும் தேர்தல்கள் இல்லை, இவை. ஒவ்வொரு வார்டுகளிலும், ஒரு சில ஆயிரம் பேரே, இருப்பார்கள். இதனால், மேலும் சில ஆயிரங்களைச் செலவழித்து ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் என்று பேரம்பேசி, எப்படியும் வெற்றி பெற்றுவிடலாம் என்று வசதியுள்ளவர்கள் தைரியமாக நம்பமுடிகிறது, இன்னும்.

தேர்தலில் தி. மு. க-வும் பங்கு கொள்ள வேண்டும் என்று பொதுச்செயலாளருக்கு ஆலோசனை வழங்கியதோழர்கள், இந்தச் சங்கடங்களையெல்லாம், நன்கு தெரிந்தவர்கள். இன்னும் என்னென்ன பித்தலாட்டங்கள் 'பெரிய மனிதர்களால்' நடைபெறும் என்பதையும் உணர்ந்தவர்கள். எனினும், ஒரு ஜனநாயக அமைப்பு, என்ன செய்யவேண்டுமோ, அதற்காக நாமும் நின்றுவிடவேண்டியதுதான் என்று வாதிட்டனர்.

பொதுச்செயலாளர், இவர்தம் ஆர்வத்தைக்கண்டு, என்ன முடிவெடுக்கலாமெனத் தீர்மானிக்க மறுபடியும் ஒரு ஆலோசனைக் கூட்டம் நடாத்தினார். அக்கூட்டத்தில், தோழர்களின் கருத்துரைகளைப்பற்றி, விரிவாகவும் விளக்கமாகவும் பேசி ஆராயப்பட்டது. அதன் விளைவாக ஆங்காங்குமுள்ள சூழ்நிலைகளையறிந்து அதற்கேற்ப ஆலோசனைகளை வழங்க, தனிக் கமிட்டிகளை நியமித்துள்ளார், பொதுச்செயலா

ளர். இக்குழுவினரே, யார்யாரை நிறுத்தலாம், எந்த இடத்தில் நிறுத்தலாம் என்பனவற்றைப் பற்றி, தலைமை நிலையத்துக்கு அறிவிப்பர்.

காங்கிரசின் போக்குக்கு புத்தி புகட்டவேண்டிய அனைவரும், ஒன்று திரண்டு காரியமாற்ற வேண்டிய கட்டம் வந்துவிட்டது! ஒவ்வொரு நகரங்களிலுமுள்ள நமது கழகத் தோழர்கள, நமது கண்ணியத்தையும் ஜனநாயக உணர்ச்சியையும், காப்பாற்றிடும் சந்தர்ப்பமாக இதனைக் கருத வேண்டும்!!

கட்சியின் கொள்கைகளை இழந்து, ஒருசில இடங்களைப் பிடிப்பதைவிட, நேர்மைக்காகப் போராடித்தோற்பது பரவாயில்லை. நாம் வளரும் இயக்கம். காங்கிரசிலே இருப்பவர்களைப் போன்றதல்ல, நம்முடைய வாழ்வு. இது போன்ற துறைகளில் வெற்றி பெற்றுக் காட்டியாவது, தன்னுடைய பலவீனத்தை மறைக்க வேண்டிய நிலையில் இன்றைய தினம் காங்கிரஸ் கட்சி இருக்கிறது. அந்தப் பரபரப்பினால்தான், "யாராயினும் சரி, பணம் செலவழிப்பார்கள் என்றால், போடு காங்கிரஸ் அபேட்சகராக" என்று சொல்லுகிறது, காங்கிரஸ் கட்சி. தேர்தல் என்பது ஜனநாயகக் கடமையே தவிர, நமக்கு, தேர்தல் மட்டுமே முக்கியமல்ல! தொண்டும், மக்களுக்குச் சேவை செய்கிறோம் எனும் மகத்தான ஆர்வமுமே, நமக்குப் பணம் காசு எல்லாம். தகாதவர் நட்பும், வேண்டாத கூட்டுறவுகளும், அச்சம் தரத்தக்க அவசரகாலத் தொடர்புகளும், தேர்தலில் வெல்லத் தேவையெனக் கருதும் நிலையில் இல்லை நாம்.

இதனை, மனதிலிருத்துங்கள் என்று ஒவ்வொரு ஊரிலிருக்கும் கழகத் தோழர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். கடமையும் கண்ணியமுமே முக்கியம்.

*

2-ம் பக்கத் தொடர்ச்சி

ஆட்சிப்பீடம் ஏறுவதற்கு முன்னாலே காங்கிரஸ், உதகைப் 'பயண'த்தைக் கண்டித்ததென்னவோ உண்மை. ஆனால் என்றைக்கு அது ஆட்சிப்பீடத்திலே அமர்த்தப்பட்டதோ, அன்றிலிருந்து இன்றுவரை அதே பயணத்தைத் தொடங்கிடுவதற்கு அது எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகள் பலப்பல!

மூன்று ஆண்டுகட்கு முன்னால் —1956ம் ஆண்டு ஜனவரி திங்களில் — இதே பிரச்சினை சட்ட மன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டுப் பின்னர் கைவிடப்பட்டது.

இப்போது சட்டமன்றத்தின் தலைவராக இருக்கிற நிதியமைச்சர் சுப்ரமணியம் அப்போதும் அதே இடத்தை அலங்கரித்தார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவராக எழுந்து தமது எதிர்ப்பைத் தெரிவித்த பின்னர், 'இல்லையில்லை! காங்கிரசுக் கட்சியும் இதை விரும்பவில்லை'' என்று விளக்கமளித்துவிட்டு அமர்ந்தார்.

அந்த விவாதத்தின்போது ஒரு விறுவிறுப்பான கட்டம். பணி ஆய்வுக்குழுவிலே இடம் பெற்றிருந்த கட்சிகளனைத்தும் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு விட்டன — ஆயினும் சட்டமன்றத்தில் அதே தீர்மானம் திரு. பி. டி. இராஜன் அவர்களாலே கொண்டு வரப்பட்டபோது, பற்பல கட்சிகளையும் சேர்ந்த எண்ணிறந்த உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்தனர்.

அப்போதும் நமது நிதியமைச்சர், எவரையும் தம்பால் ஈர்த்திடவல்ல திறம் தம்மிடமிருப்பதாக எண்ணிக்கொண்டு, மெள்ள எழுந்தார் — சாவதானமாகப் பேசினார், நிலைமையைச் சமாளித்திடும் எண்ணத்தோடு.

ஆயினும் தோல்வி! எனவே மாமன்றத்திற்கு விளக்கமளித்திடும் பணியினை மேற்கொண்டார், நமது நிதியமைச்சர்:

"அரசாங்கத்தின் சார்பில் நான் ஒரு அறிக்கை விடுக்க விரும்புகின்றேன். பணி ஆய்வுக் குழுவிற்கு இந்தத் தீர்மானம் வந்தபோது, இது சட்ட மன்றத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்று, கம்யூனிஸ்டுகள் உட்பட, எல்லாக் கட்சியினரும் கருத்து அறிவித்தனர். என்றாலும் அரசியல் கட்சிகள் இந்தச் சூழ்நிலையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளக் கூடுமென்று நான் கருதியதால், இந்தத் தீர்மானத்தை சட்ட மன்றத்திற்குக் கொண்டு வரும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. தீர்மானம் சட்ட மன்றத்தில் கொண்டுவரப்பட்டு, ஒருமுகமான ஆதரவு இருப்பின் அரசாங்கம் அதன்படி செயல்படும் என்று நான் ஆலோசனை கூறினேன்.''

இது அவர் தந்த விளக்கம். இந்த அளவு எச்சரிக்கையோடுதான் காரியங்கள் செய்யப்பட்டன நமது அரசாங்கத்தரால்.

ஆயினும் எதிர்பாராத வகையிலே சட்ட மன்றத்தில் எதிர்ப்பு பற்பல கட்சியினரும் எதிர்த்தனர் — கம்யூனிஸ்டுகள் உட்படத்தான!

எதிர்ப்புக்குரல் எழுப்பப்பட்டதைக் கண்ட நிதியமைச்சர் சுப்ரமணியம், என்ன முடிவை அறிவித்தார் தெரியுமா!

"இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரை ஒருமுகமான கருத்து ஏற்படாததாலும், பல கட்சிகள் இதை எதிர்ப்பதாலும், அரசாங்கமும் தீர்மானத்தை ஆதரிக்கவில்லை.''

இந்த அளவு தெளிவோடு அன்று பேசிய நிதியமைச்சர், இன்றுமட்டும் மாறுபட்ட முறையிலே காரியமாற்ற முனைவானேன்?

இப்போது ஒருமுகமான ஆதரவு அந்தத் தீர்மானத்திற்குக் கிடைத்திடவில்லை — திராவிட முன்னேற்றக் கழகம் திட்டவட்டமாகத் தனது எதிர்ப்பைத் தெரிவித்துவிட்டிருக்கிறது! அன்றாவது, பணி ஆய்வுக் குழுவில் மட்டுமேனும் ஒருமித்த கருத்து இருந்தது — இன்று அதுவுமில்லை.

ஆனாலும் அரசாங்கம் 1956-ல் காட்டிய எச்சரிக்கையும், ஜனநாயகக் கடமையுணர்ச்சியும், இன்று தூர எறியப்பட்டுள்ளனவே! காரணமென்ன?

மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தயங்கியதோர் பொறுப்பை, இன்று துணிந்து ஏற்றுக்கொண்டது எதனால்?

நாட்டு மக்களுள்ளத்திலே எழுகின்ற கேள்விகள் இவை மட்டுமல்ல! தீர்மானத்தை அன்று எதிர்த்த கம்யூனிஸ்டுக் கட்சி இன்று ஆதரித்திடக் காரணமென்ன: என்பதும் புரியாததோர் புதிராக இருக்கிறது!!

நிதியமைச்சர் சுப்ரமணியத்திற்கு இன்று ஏற்பட்டிருக்கிற துணிவிற்குக் காரணம், ஆளும் கட்சிக்குச் சட்டமன்றத்திலேயிருக்கிற எண்ணிக்கை பலம் தவிர, வேறெதுவுமல்ல!!

ஜனநாயகம் தவிடுபொடியாக்கப்பட்டாலும், இந்த நாட்டு மக்கள் வாளா இருக்கப்போகிறார்கள், துரும்பேனும் அசைந்திடப்போவதில்லை, என்றோர் துணிவு அவர் உள்ளத்திலே குடிகொண்டிருக்கிறது.

எனவே அவரது அறிக்கை இந்த நாட்டு மக்கள் முகத்திலே பூசப்பட்ட கரி! இதற்கு என்ன பதில் தரப்போகிறார்கள் மக்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும், காங்கிரசாருக்கும் இடையே மட்டுமே ஏற்பட்டிருக்கிற பிரச்சினை அல்ல இது!

பிரச்சினையைப் பொறுத்தவரை திராவிட முன்னேற்றக் கழகம் தனது கடமையை ஆற்றிவிட்டது — எதிர்ப்பைத் தெரிவித்துவிட்டது, சட்ட மன்றத்திலும், பணி ஆய்வுக் குழுவிலும்.

எதிர்ப்பினையும் பொருட்படுத்திடாமல் ஆளும் கட்சியினர் முடிவெடுத்துவிட்டனர்.

இனி இருக்கிற கடமை மக்களுடையது.

இந்தத் தருணத்தில், 1956ல் சட்டமன்றத்திலே ஆற்றப்பட்டுள்ள ஓர் பேருரை நமது கவனத்திற்கு உரியது.

"திரு. பி. டி. இராஜன் அவர்களால் கொண்டுவரப்படுகிற இந்தத் தீர்மானத்தை எதிர்க்க வேண்டிய நிலையில் நான் இருப்பதற்காக மிகவும் வருந்துகின்றேன். இந்தத் தீர்மானத்தைப் பற்றி நாம் ஆலோசித்திடும் போது, இப்போதிருக்கிற சூழ்நிலையை எண்ணிப்பார்க்க வேண்டும். சட்டமன்றத்திற்கு வெளியிலேயிருக்கிற இந்த நாட்டு மக்களின் எண்ணத்தையும், அவர்கள் ஆதரவு எந்த அளவு இந்தத் திட்டத்திற்குக் கிடைத்திடும் என்பதையும் எண்ணிப்பார்த்தாக வேண்டும். காங்கிரசுக் கட்சி நிர்வாகப் பொறுப்பை ஏற்றதிலிருந்து, ஏகாதிபத்தியத்தின் அறிகுறி எனக் கருதப்பட்ட அனைத்தையும் தவிடுபொடியாக்கத் துவங்கியது. 1937ல், இராஜகோபாலாச்சாரியாரின் அமைச்சரவையின் போது, இதே பிரச்சினை எழுந்தது. ஆனால் நல்ல வேளையாக ஊட்டியில் சட்டமன்றம் நடத்தப்பட வேண்டுமென்ற திட்டம் கைவிடப்பட்டது.

சட்டமன்றத்தை மாற்றுவதாலே புதிதாக ஏற்படக்கூடிய செலவு ரூ. 50,000 தான் என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிற உறுப்பினரின் கூற்றை என்னால் நம்பமுடியவில்லை. சட்டமன்றத்தின் கூட்டத்தை அங்கே நடத்துவதென்றால், தலைநகரே மாற்றப்பட வேண்டும். அதனால் ஏற்படவிருக்கிற பண விரயத்தையும் மற்றும்பல தொல்லைகளையும் உங்களாலே யூகித்திட முடியுமெனக் கருதுகிறேன். செக்ரடேரியட்டும் அதைச் சேர்ந்த பற்பல சாதனங்களும் அங்கே சென்றாக வேண்டும். சிவப்பு நாடா முறை மிக அதிகமாக இருக்கிறதென்று ஏற்கெனவே ஒரு அதிருப்தி இருந்து வருகிறது. இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த உறுப்பினர், செக்ரடேரியட் மாற்றப்படுவதை விரும்புகிறாரா இல்லையா என்பதை நானறியேன். அங்ஙனம் மாற்றப்பட்டால், ஏற்படுகிற பணச்செலவு மிகமிக அதிகம். மாறாக, அது உதகையிலே இயங்கிட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டால், அலுவலக வேலைகளிலே தடங்கல்களும் தேவையற்ற காலதாமதங்களும் ஏற்படுமென நான் அஞ்சுகிறேன்.

காங்கிரசுக் கட்சி, மாநிலங்களிலும் சரி, மத்திய அரசாங்கத்திலும் சரி, உண்மையான ஜனநாயகத்தை உருவாக்க எத்தனிக்கிறது. ஜனநாயகமென்பது மக்களின் பொருட்டு, மக்களால், மக்களுக்காக நடத்தப்படுகிற ஆட்சி என்று ஆப்பிரகாம் லிங்கன் விளக்கமளித்திருக்கிறார். எனவே இந்தப் பிரச்சினையில் நாம் மிகவும் எச்சரிக்கையோடு முடிவெடுத்தாக வேண்டும்.

ஐரோப்பியர்கள் உதகைக்குப் போனது வேண்டுமானால் ஒரு விதத்தில் நியாயத்தின்பாற்பட்டதென்று சொல்லலாம்... அவர்கள் குளிர் பிரதேசத்திலிருந்து வந்தவர்கள். அவர்களுக்கு இந்த நாட்டு வெப்பம் ஒத்துவராததாலே, குளிர்ச்சியான இடத்தை அவர்கள் நாடினர். இந்தியர்களும் ஐரோப்பியர்களும் ஒன்றல்லவே!

நாம் பிறந்ததும் வளர்ந்ததும் வெப்பமான நாட்டிலேதான். காந்திய முறையில், சமதர்மப் பாதையில், ஜனநாயக அடிப்படையில் சமுதாயத்தையும் அரசியலையும் அமைத்திட வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள் நாம், என்று இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிற உறுப்பினருக்கு, நான் நினைவு படுத்திக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் திட்டத்தின் விளைவுகளையும், அதன் உட்பொருள்களையும் உணர்ந்து கொள்ளுமாறு அவரை நான் மன்றாடி வேண்டுகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றுதற்பொருட்டு நாம் பட்டுவருகிற பாடுகள் கொஞ்ச நஞ்சமல்ல! உதகையில் சட்டமன்றத்தின் கூட்டம் நடத்தப் பெறுவதாலே ஆகக்கூடிய செலவு ரூ 50,000 தான் என்றாலும், அந்தத் தொகை சிறியது என்று எவரும் கருதிட முடியாது. இன்றிருக்கிற சூழ்நிலையில் ஒவ்வொரு காசும் முக்கியம். வரிப்பளு மிக அதிகமாக இருப்பதாக ஏற்கெனவே நாட்டு மக்களுள்ளத்திலே ஓர் உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. எனவே இந்தத் திட்டத்தைப் பற்பல கோணங்களிலிருந்தும் பார்த்து, அதன் விளைவுகளையும் மனதில்கொண்டு, இதனை வற்புறுத்தாதிருக்குமாறு, திட்டத்தைக் கொணர்ந்த உறுப்பினரை வேண்டிக்கொள்கிறேன்"

இந்த உரையை ஆற்றியவர் திரு. ஏ. எம். இரத்தினசாமி என்பார்.

ஒளிவு மறைவற்ற உள்ளத்தோடு பேசுபவர் எவரும், உதகைப் 'பயணத்தை' தேவையற்றதோர் கேளிக்கை, பணவிரயம், எனறே உரைத்திடுவர்.

மலையேறப்போகும் சர்க்காரின் கேளிக்கையிலே பங்குபெறத் திராவிட முன்னேற்றக் கழகம் மனப்பூர்வமாக விரும்பவில்லை.

கம்யூனிஸ்டுகள் காங்கிரசோடு இந்தப் பயணத்தில் கைகோர்த்து நிற்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகமோ இந்த நாட்டு மக்களது தீர்ப்பினை ஆவலோடு எதிர்பார்த்த வண்ணம் இருக்கிறது.